Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை (26.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 360

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.



நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மற்றும் அவரது பாரியாரும் இலங்கையின் முதல் பெண்மணியுமான ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரது பாரியாரும் அமெரிக்காவின் முதல் பெண்மணியுமான மிச்சேல் ஒபாமா ஆகியோரை சந்தித்தபோது...

## தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பாளர்கள் வடக்கு நீதிமன்றங்களில் நியமனம்

### யாழ். வந்த சட்டமா அதிபர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் ஒருகட்டமாக தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நீதிமன்றங்களில் சிங்களம் மற்றும் தமிழில் தயாரிக்கப்படும் குற்றப்பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை அந்தந்த மொழிகளில் மொழி பெயர்ப்பதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ நேற்று உறுதியளித்துள்ளார்.

யாழிற்கு விஜயம் மேற்கொண்ட சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ நேற்று யாழ். நீதிமன்றில் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

அச்சந்திப்பின் போது, பொலிஸாரினால் தாக்கல் செய்யப்படும் குற்றப்பத்திரங்கள் சிங்களத்தில் இருப்பதனால் மொழிபெயர்ப்பு செய்வதற்கு சிரமங்களை எதிர் நோக்குவதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும் குற்றப்பத்திரம் மற்றும் ஆவணங்களை மொழி பெயர்ப்பு செய்வதற்கு பல சிக்கல்கள் ஏற்படுகின்றதாகவும், அதேவேளை, இவ்வாறு மொழிபெயர்ப்பிற்கான காலம் நீடிப்பதனால் வழக்குகளின் கால எல்லைகளும் நீடிக்கப்படுகின்றன. வழக்குகள் தற்போது நிலுவையில் இருப்பதாக சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொலிஸாரினால் தயாரிக்கப்படும் குற்றப் பத்திரங்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அனுப்பி

(19) ஆம் பக்கம் பார்க்க



## ஐ.நா. அறிக்கை நிராகரித்தது இலங்கை



(ஜெனிவா)

இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழி மூலமான அறிக்கையை இலங்கை அரசு முற்றாக நிராகரித்துள்ளது. மேற்படி வாய்மொழிமூலமான அறிக்கைக்கு சீனாவும் ரஷ்யாவும் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டன. பிரான்ஸ் உட்பட ஒரு சில நாடுகளே மேற்படிவாய்மொழி மூலமான அறிக்கைக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தின.

இலங்கை நிலைவரம் தொடர்பிலான வாய்மொழி அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள ஆணையர், இளவரசர் செயித் ராஅத் செயித் அல் ஹுசேன் ஏற்கனவே சமர்ப்பித்திருந்தார்.இந்த அறிக்கை குறித்த விவாதம் நேற்று ஜெனிவாவில் நடைபெற்றது. இலங்கையில் சிவில் அமைப்புகள், மனித உரிமை பாதுகாவலர்கள், பாதிக்கப்பட்டோருக்கான அமைப்புக்கள், சர்வதேச நீதி விசாரணையை வலியுறுத்துவோர் உள்ளிட்ட பிரிவினர் மீது அரசாங்க அமைப்புக்களாலும், அரசு சாரா அமைபபுக்களாலும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் கண்டு தாம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கைவிடப்பட்டது முதலமைச்சர் நிதியம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்படவிருந்த உத்தேச முதலமைச்சர் நிதியம் இப்போது கைவிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து வடக்கு முதல்வர் நேற்றைய மாகாண சபை அமர்வில் விளக்கமளித்தார்.

புலி பதுங்கினால் அதற்கு காரணம் இருக்கும். நாமும் பதுங்கவேண்டிய தருணம் இது என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வடமாகாண சபையின் 16ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது.

இதில் முதலமைச்சர் நிதியம் தொடர்பில் வடமாகாண ஆளுநரினால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் அவைத்தலைவர் விளக்கமளித்ததைத் தொடர்ந்து இந்நிதியம் தொடர்பில் பின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கைத்தொழில் துறையை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் மேற்படி ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைகள் முன்னேற்றம் காணமுடியும். இதன்படி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் நிறுவனங்களில் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் வகையிலான ஒரு திட்டமும் உள்ளது.

இதற்கமைய, பிரத்தியேகமான குழுவொன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் நிறுவனங்களிடமிருந்து கணக்காய்வுப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகளின் விடுதலை விரைவான நடவடிக்கைக்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கான நடவடிக்கை கொழும்பு உயர் மட்டங்களுடன் கலந்துரையாடிய பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ நேற்றுத் தெரிவித்தார்.

யாழிற்கு வருகை தந்திருந்த சட்டமா அதிபர் யாழ். நீதிமன்றில் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

அக்கலந்துரையாடலின் போது, சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வ

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு கவுன்சில் உறுப்பினர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்கான கவுன்சில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தம் 27 உறுப்பினர்களைக்கொண்ட இக்கவுன்சிலுக்கு சமூக மட்டத்தில் இருந்து 14 பேரும், பல்கலைக்கழகத்தில் இருந்து 13பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான கடிதம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்று கிடைத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை

(19) ஆம் பக்கம் பார்க்க

## முதலீட்டை அதிகரிக்க வடக்கில் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளிக்கும் விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முத்தற்கட்டமாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சானது வடமாகாணத்தில் உள்ளூர் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கென ஏற்பாடு செய்துள்ள விசேட

(19) ஆம் பக்கம் பார்க்க



## சித்த மருத்துவ நூல்களின் காப்பகம் அமைக்கும் முயற்சி விரைவில்

சித்த, யுனானி, ஆயுர்வேதம் போன்ற மருத்துவங்களின் நுண் விபரங்களை உள்ளடக்கிய கலை அருங்காட்சியகத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக வட மாகாணமுதலமைச்சர் தெரிவித்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெற்ற நாவலர சிலை திறப்பு விழாவின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சித்த, யுனானி, ஆயுர்வேதம் போன்ற மருத்துவங்களின் நுண் விபரங்களை உள்ளடக்கிய பல ஏட்டுச் சுவடிகளும் பழம் பெரும் நூல்களும் ஆங்காங்கே எங்கள் மக்கள் இல்லங்களில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. நாவலர் அன்று செய்த கைங்கரியத்தின் தொடர்ச்சியாக நாங்கள இந் நூல்களைச் சேகரித்து நுண்படமெடுக்கும் முறையில் அவற்றைப் பிரதி பண்ணி ஒரு கலை அருங் காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அந் நூல்களைத் தம்கை வசம் வைத்திருப்போர் எமது யாழ். முதன்மை நூலகருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்தால் எமது வட மாகாண சபை அவற்றின்பாது காப்புக்கான காப்பகம் ஒன்றினை நிறுவ முயற்சி எடுக்கும் என தெரிவித்தார். (48)

## கைத்தொழில் துறையை வலுப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்



கைத்தொழில் துறைகளைப் பாதுகாத்து பலப்படுத்துவது மட்டுமன்றி, அதனூடாக துறைசார்ந்தவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கைத்தொழில் அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள கைத்தொழில் பேட்டைகளின் ஊடாகவும், ஏனைய தொழிற்துறை நிறுவனங்களின் ஊடாகவும், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைகளை மேம்பாடடையச் செய்து அவற்றுக்கு ஊடாகத் துறைசார்ந்தோரது வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் முன்னேற்றுவதே எமது நோக்கமாகும். அதற்கமைவாக அமைச்சின் கீழான சகல நிறுவனங்களும் அவை சார்ந்த தலைவர்கள், பொது முகாமையாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பூரண ஒத்துழைப்பையும், ஆதரவினையும் வழங்க வேண்டும்.

இவ்வாறான ஒன்றிணைந்த செயற்பாடுகளின் ஊடாக கைத்தொழில் துறைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, அவற்றைப் பலப்படுத்துவதும், துறைசார்ந்தோர்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையிலும் உழைக்க வேண்டும். அதுமட்டுமன்றி, தம் ஒரு போதும் முறைகேடுகளுக்கும், நியாயமற்ற செயற்பாடுகளுக்கும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குக் கீழான ஹொரண, களுதாவல, கண்டி பல்லேகல கைத்தொழில் பேட்டைகளின் தற்போதைய நிலைவரங்கள், முன்னேற்பாடுகள் தொடர்பில் அமைச்சர் துறை சார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார். அத்துடன், அங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய புனரமைப்பு வேலைகளைப் பகுதி பகுதியாகவும், விரைவாகவும் முன்னெடுக்குமாறும் துறைசார்ந்தோருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திருமதி புஷ்பா, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் ரட்ணமழல கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் ஆரிய சிங்க உள்ளிட்டோர் உடனிருந்தனர.

## தவறிவிட்டது

மயில்வாகனம்-சந்திரகாந்தன் ஆகிய எனது அடையாள அட்டை மோ.சைக்களில் வரி, காப்புறுதிப் பத்திரம் உட்பட முக்கிய ஆவணங்களுடனான பேர்ஸ் மருதனார் மடம் பகுதியில் 25.09. 2014 அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 077 8996624 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

(C/364)


### டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3727)


## இந்திய மீனவர்களுக்கு ஒக்ரோபர் வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 25 பேரையும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி பருத்தித்துறைக் கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீதான வழக்கு மீண்டும் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் இவர்களை அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## வாணி விழா

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வாணி விழா கொண்டாடப்படவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத் தூதுவராலயத்தில் பதில் பிரதித் தலைவர் சுப்பிரமணியம் தட்சணாமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக வடமாகாண பிராந்திய மின் பொறியியலாளர் எஸ்.ஞானலோனும் கலந்து கொள்ளவுள்ளனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (137)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

#### கலைப்பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

கலைப்பீட 1 ஆம், 4 ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் 29.09.2004 ஆம் திகதி திங்கட்கிழமை வழமைபோல நடைபெறும். விடுதியில் தங்கும் மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை விடுதிகளுக்கு திரும்புமாறும் திங்கட்கிழமை விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
25.09.2014

(C/3522)


## மண்டைதீவு துறைமுக வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கான வீதி புனரமைக்கப்படுகின்றது. வேலணை பிரதேச சபையினால் இவ்வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. யுத்தகாலம் முதல் இவ்வீதியானது புனரமைக்கப்படாமல் இருந்துவந்தது. மண்டைதீவுப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பகுதி கடற்றொழிலாளரின் பயன்பாட்டிற்கு கடற்படையினரால் விடுவிக்கப்பட்டுள்ள சூழலில இவ்வீதியானது குன்றும் குழியுமாக வெளிக்கிளம்பிய நிலையில் காணப்பட்டது. இந்நிலையில் தற்சமயம் வேலணைப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் இவ் வீதிகள் கல்லிடப்பட்டு தார் ஊற்றி புனரமைக்கப்பட்டு வருகிறது. (பா)


### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2966 திகதி 24-09-2014

ஆங்கில எழுத்து: Q

வெற்றி எண்கள்: 05 06 13 37 | போனஸ் இல: 32

ஜக்பொட் பரிசு ரூ.21,170,650/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 230861 | 20/- | 4,617,220/- |
| 2 இல | 16464 | 100/- | 1,646,400/- |
| 3 இல | 345 | 1,000/- | 345,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9292 | 40/- | 371,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 637 | 1,000/- | 637,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 21,170,650/- | 21,170,650/- |
| 1 இல + போனஸ் இல | 11042 | 100/- | 1,104,200/- |
| 2 இல + போனஸ் இல | 523 | 500/- | 261,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 420 | 200/- | 84,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 269620 | | 31,961,650/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 10,000,000/-

அபிவிருத்தி லொத்தர் சபை


(C/3504)


## மாகாண சபையில் நேற்று இலைக்கஞ்சி

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு நேற்று இலைக்கஞ்சி வழங்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் 16 ஆவது அமர்வின் போது இடம்பெற்ற தேனீர் இடைவேளையின் போது தேனீருக்கு பதிலாக இலைக் கஞ்சி வழங்கப்பட்ட்து.

இயற்கையான ஆதாரத்தை அருந்த வேண்டும் என்றா அல்லது வாய்க்கு ருசியானவற்றை அருந்த வேண்டும் என்றா இவ் இலைக்கஞ்சி வழங்கப்பட்தற்கான காரணம் தான் புரியவில்லை. எனினும் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும் இலைக்கஞ்சி வழங்கப்பட்டது என்பது தான் உண்மை. (இ)



**நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அவர்களின் 53. ஆவது நினைவு தினம் 22.09.2014 கல்லூரியில் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் அவரின் நினைவுத்தூபிக்கு அன்னாரின் பேரனாகிய ந.சிவகுமாரன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அன்றைய தினம் அதிபர், தீவக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பழைய மாணவர் சங்கத்தினர், மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவரும் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினார்கள். (85)**

# இருப்பு விபரம் சமர்ப்பிக்கப்படாத அரிசி, நெல் அரசுடமையாக்கப்படும்

## யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபை அறிவிப்பு

அரிசி மற்றும் நெல் இருப்பு விபரங்களை சமர்ப்பிக்கத் தவறும் மில் உரிமையாளர்கள் மற்றும் அரிசி விற்பனை முகவர்களிடம் இருக்கும் அரிசி, நெல் மூடைகள் அரசுடமை ஆக்கப்படுமென யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அலுவலர் தனசேகரம் வசந்தசேகரன் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

அரிசி மற்றும் நெல் மூடைகளின் இருப்பு விபரத்தினை கடந்த 12 ஆம் திகதிக்கு முன்னர் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலையில் 32 அரிசிஆலை 9 கடை உரிமையாளர்கள் இருப்பு விபரத்திரட்டினை சமர்ப்பித்துள்ளனர்.

இதுவரையில் சமர்ப்பிக்காத அரிசிஆலை உரிமையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிக்குள்ளும், 25ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிக்குள்ளும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்காத பட்சத்தில்,அரிசிஆலை மற்றும் விற்பனைமுகவர் நிலையங்கள் பரிசோதனைக் குட்படுத்தப்படும் போது, விபரத்திரட்டுக்கள் சமர்ப்பிக்காத அரிசி மற்றும் நெல் மூடைகள் அரசுடமை ஆக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (25)

# வெள்ளை நிறமாக மாறும் பாதசாரிகள் கடவை



நாட்டில் அனைத்து இடங்களிலும் உள்ள பாதசாரிக் கடவை வெள்ளை நிறமாக மாற்றம் பெறவுள்ளதாக ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் பரிம்பநாதன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் இதற்கான வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களை தடுக்கும் நோக்கில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக சாரதிகள் மற்றும் பொதுமக்களிடையேயான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன் தினம் யாழ்.வணிகர் கழகத்தில் இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# பெண்களைத் தலைமைத்துவமுடைய குடும்பங்களுக்கு நிதி வழங்கல்

(வேலணை)

யாழ்.மாவட்டத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டியங்கி வருகின்ற குடும்பங்களினது உயர்வுக்கான கொடுப்பனவுகளை வழங்கு வதற்கான நிதிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரினது ஏற்பாட்டின் பேரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த நிதியானது யாழ்மாவட்டத்தில் இயங்கி வருகின்ற 16 பிரதேச செயலகங்களுக்கும் தலா 17.35 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு குடும்பத்தினது உயர்வு கருதி அவர்களினது விருப்பமான தொழிலுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்து அந்த உபகரணங்கள் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# மானிப்பாய் சிறுவர் இல்லத்தில் மின் விசிறிகள் திருட்டு

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் மானிப்பாயிலுள்ள சிறுவர் இல்லம் (எலிம்) ஒன்றிலிருந்து நான்கு மின் விசிறிகள் கடந்த திங்கட்கிழமை திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி மின் விசிறிகள் திருடிய குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர் இல்லத்திலிருந்து தலா 4000 ரூபாய் பெறுமதியான மின் விசிறிகளே இவ்வாறு திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (48)

# பொறுப்பற்ற ஆயுர்வேத வைத்தியர்களால் சிரமங்களை எதிர்நோக்கும் நோயாளர்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச சபையுடன் இணைந்து இயங்கிவரும் ஆயுர்வேத வைத்தியசாலை முன்னறிவித்தல் இன்றி சில வேளைகளில் மூடப்படுவதால் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே நடைபெறும் ஆயுர்வேத வைத்தியசேவைக்கு வைத்தியர் வருகைதராத நாட்கள் நோயாளர்களுக்கு முற்கூட்டியே அறிவிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுவதுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வைத்தியர்களின் இந்த பொறுப்பற்ற செயற்பாடுகளால் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் உரியவர்கள் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# இப்பவும் போராட்டக் கதைகேக்கிற இளிச்சவாய்களாத்தான் இருப்பமா..?




'உங்களுக்குச் சத்தியமாக ஒண்டும் தெரியாதோ....

எங்கள் வாழ்வேன் இப்பிடிக் கெட்டுக்கிடக்கிறது?

உங்களுக்குச் சத்தியமாக ஒண்டும் தெரியாதோ....'

கவிஞர் சோ. பத்மநாதன்ரை கவிதையைக் கொஞ்சம் மாத்தி, இப்பிடி எழுதியிருக்கிறன். இதைப் படிச்சால் சோ.ப கோவிக்கமாட்டார் எண்டு தெரியும். அவரும் இப்பிடி ஒரு கவிதையை இப்ப எழுதினால் என்ன எண்டுதான் யோசிப்பார்.

அந்த அளவுக்குத் தமிழ்ச்சமூகத்தின்ரை அரசியலும் அரசியல் தெரிவுகளும் நாறிப் போய்க் கிடக்குது.

என்னவோ தெரியாது, தமிழாக்கள் எப்பவும் பால் தராத, கண்டு போடாத மாட்டைத்தான் விரும்புகினம். இந்த மாடு வளர்த்தவையையே இடிக்கும் எண்டு தெரிஞ்சாலும் இந்த மலட்டு மாட்டுக்குத்தான் புல்லைப் போட யோசிக்கினம்.

பால் தாற மாட்டுக்குப் புல்லுப் போடுறதைப்பற்றி ஒரு நாளும் அவை சிந்திக்கிறதேயில்லை.

1960, 70 களில் இருந்தே இதுதான் நிலைமை.

அதாலதான் தமிழாக்கள் நல்லா நொந்து கெட்டுப்போயிருக்கினம்.

உடம்பில மட்டுமில்ல, மனசிலையும் நல்லாக் காயப்பட்டிருக்கினம்.

ஆனாலும் இன்னும் அவை தங்கட பிரச்சினை என்னெண்டும், இந்தப் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கிறது எண்டும் தெரியாமல் தடுமாறிக் கொண்டுதானிருக்கினம்.

இப்ப பாருங்கோ நிலைமையை....

ஒரு காலம் செல்வநாயகத்தையும் அவற்றை தமிழரசுக் கட்சியையும் நம்பிக் கிடந்தினம்.

பிறகு அமிர்தலிங்கத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் நம்பியிருந்திச்சினம்.

அதுக்குப் பிறகு பிரபாகரன் வந்து நம்பிக்கையூட்டினார்.

இப்ப?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒண்டுதான் இப்ப தமிழருக்கு மிஞ்சிக்கிடக்கிற அரசியற் சக்தி எண்டு கனபேர் நினைக்கினம்.

ஆனால், கூட்டமைப்போ மெல்ல மெல்லத் தமிழரசுக்கட்சியாக மாறிக்கொண்டிருக்கு.

அதாவது, செல்வநாயகமே கையை விட்ட கப்பலை இப்ப மாவை, சம்பந்தன், சுமந்திரன் குறூப் திரும்பப் பொறுப்பெடுத்து ஓட்டிறதுக்குப் பாடுபடுகுது.

இதாலதான் கூட்டமைப்பைப் பதிவு செய்யிறதைச் சம்பந்தன் கோஸ்டி இழுத்தடிச்சது.

இந்த விளையாட்டை எல்லாம் தெரிஞ்சாலும் கூட்டமைப்பை விட்டிட்டு வெளியில வந்தால் தங்கட கதை காலி எண்டு நினைச்சுக்கொண்டுதான் சுரேசும் செல்வமும் இன்னும் இழுபடுகினம்.

ஆனால், இது கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பாகிற கதையாகத்தான் போய் முடியும்.

தமிழரசுக் கட்சியைத் திரும்பவும் வளர்த்து, அதில இருந்து தமிழாக்கள் தங்கட உரிமை எண்ட கனியைப் பெறுகிறதோ, தமிழீழம் எண்ட தேனை எடுக்கிறதோ நடக்கக் கூடிய காரியமே இல்லை.

இதை விடப் பகல் கனவு இனிப்பாக இருக்கும்.

ஆனால், தான் என்ன வித்தையைக் காட்டினாலும் இந்தச் சனங்கள் அதை நம்பத் தயாராக இருக்குதுகள். இதில படிச்சவைதான் இன்னும் இழிச்சவாய்த்தனமாக இந்தக் கதைகளுக்கெல்லாம் எடுபடுவினம் எண்டும் மாவை கோஸ்டிக்குத் தெரியும்.

அதாலதான், சனங்களுக்கு முன்னுக்கு நிண்டு 'தமிழீழத்துக்காகப் போராடுவோம். இலக்கை எட்டும்வரையில போராட்டம் ஓயாது...' எண்டெல்லாம் தாராளமாகப் புலுடா விடுகினம்.

பாராளுமன்றத்திலயும் நீதிமன்றத்திலயும் இவை இதே வாயால வேற கதை கதைக்கினம்....

இதைவிடக் கேவலமான பிழைப்பும் இதை விட வேற என்ன உண்மையும் வேண்டிக்கிடக்கு....?

இதைப்பற்றிக் கதைச்சால் சிலர் சப்பைக்கட்டுக் கட்டுகினம்.

கேட்கவே அருவெருப்பாக இருக்கு.

ஆனால், ஒண்டு மட்டும் உண்மை....

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கரைஞ்சு (கலைஞ்சு) தமிழரசுக் கட்சியாகினால்...

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்திலதான்....

அப்பவும் இப்பிடித்தான் எழுத வேண்டியிருக்கும்....

'உங்களுக்குச் சத்தியமாக ஒண்டும் தெரியாதோ....

எங்கள் வாழ்வேன் இப்பிடிக் கெட்டுக்கிடக்கிறது?

உங்களுக்குச் சத்தியமாக ஒண்டும் தெரியாதோ....'

சந்தர்ப்பங்கள் நிறையப் பேரைக் கூப்பிடுகின்றன. ஆனால் சிலர்தான் எழுந்து நிற்கிறார்கள். - *ஆலிவர் வோர் போர்ட்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.emurasu.com**

## நிற்காது அகிம்சைப் போராட்டம்!!

தமிழ் மக்களுக்கு ஓர் இறைமையுள்ள தன்னாட்சித் தீர்வு கிட்டும் வரை விடாது தொடரப்போகும் அகிம்சைப் போராட்டத்தை வரும் ஜனவரி முதலாம் திகதி தொடங்குவதற்கான தீவிரத் தயாரிப்பு வேலைகளில் தமிழரசுக் கட்சி ஈடுபட்டு வருவதாக தலைவர் மாவை ஒவ்வொரு மேடைப் பேச்சிலும் உறுதிப்படுத்தி வருகிறார்.

அரசை வழிக்குக் கொண்டுவந்து தீர்வை அடையும் வரை விடாது நடத்தப்படவிருக்கும் அகிம்சைப் போராட்டத்திற்கு அரசும் சர்வதேசமும் பணிந்துதான் ஆகும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் காந்தி நடத்திக் காட்டிய இந்தப் போராட்டம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையே அசைத்தது உண்மை.

ஒரு நாளேனும் தனது போராட்டத் தொடர்ச்சியைக் கைவிட்டு விடாது, ஒரு வகையிலான அகிம்சை நடவடிக்கைக்குத் தடை ஏற்படும்போது இன்னொரு வகையில் அகிம்சைப் போராட்டத்தை நடத்தி அரசுக்குத் தொடர்ச்சியான அழுத்தத்தை அதிகரித்தபடி இருந்தார் காந்தியார்.

உண்மையில் அகிம்சைப் போராட்டமானது தடை ஏற்பட்டவுடன் கைவிடுவதோ, இடைநிறுத்திவிட்டு தேர்தலுக்கு ஓடிவிடுவதோ அல்லது தேர்தலைக் காத்திருப்பதோ அல்ல. மாறாக அது இன்னொரு வகையில் இன்னும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுத் தொடரப்பட வேண்டும். அப்போதுதான் அதற்குப் பெயர் அகிம்சைப் போராட்டம்.

காந்தி, வெள்ளை அரசு தங்கள் நாட்டிலிருந்து கொண்டு வரும் பொருட்களைப் புறக்கணிக்கச் சொன்னார். மக்களைத் திரட்டி யாத்திரை சென்றார். உப்பை எடுக்க விடாமல் தடுத்தார். அரச பதவிகளைத் தூக்கியெறிய வைத்தார். உண்ணாவிரதப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தினார். சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்றறிவித்து அப்படியே அமர்ந்தார். அவரைப் பின்தொடர்ந்த மக்கட் பெருவெள்ளத்தின் ஒத்துழையாமை கண்டே அரசு பணிந்தது.

தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போராட்டம், கடந்த காலத்தில் அவர்கள் செய்ததைப் போல் மக்களுக்குப் போக்குக் காட்டுவதற்காக உசுப்பிவிட்டுப் பிறகு அறிக்கைகளில் பார்த்துக் கொள்ளலாம் என்றிருக்குமானால், அதில் எந்தப் பயனும் விளையாது என்பதை இன்று மக்களைப் போலவே அவர்களும் உணர்ந்திருப்பர்.

வரலாற்றில் தமிழரசுக் கட்சியின் முதலாவது முக்கிய அகிம்சைப் போராட்டம், 1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை எதிர்த்து காலிமுகத்திடலில் நடந்தது. இப்போராட்டத்தை அரசு, பொலிசாரின் அனுசரணையுடன் காடையர்களை ஏவி, சில மணி நேரத்திலேயே கலைத்து விட்டது. அத்துடன் அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

இதன் பின்பு 1961–ல் சத்தியாக்கிரகப் போராட்டம், தமிழ் பிரதேசங்களில் இரண்டு மாதங்கள் நிர்வாகத்தை செயல் இழக்கச் செய்தது. இரண்டு மாதங்களின் பின்பு அரசு இராணுவத்தைக் கொண்டு போராட்டத்தைத் தடைசெய்ததோடு போராட்டம் அப்படியே நின்றது. தொடரப்படவில்லை.

பிறகு 1974–ல் தமிழர் விடுதலைக் கூட்டணியாகி தமிழ்த் தலைவர்கள் மத்தியில் ஒரு பெரும் ஐக்கியம் நிலவிய போதிலும், இடைக்கிடை பகிஸ்கரிப்பு, கறுப்புக் கொடி காட்டல், அவ்வப்போது கடையடைப்பு தவிர வேறெந்த அகிம்சைவழி அச்சுறுத்தலும் அரசுக்கு நேரவில்லை.

இந்த மாதிரியான கண்துடைப்பு போராட்டங்களினால் எந்த மாற்றமும் நடைபெற்றுவிடாது என்பது இன்று எங்களுக்கு மட்டுமல்ல மாவையாருக்கும் நன்றாகத் தெரியும். ஆதலினால் காந்தியார் காட்டிய வெற்றிகரமான அகிம்சைப் போராட்டத்தை மாவையார் மக்களைத் திரட்டி தொடர்ச்சியாக நடத்திச் சாதிப்பார் என்று காத்திருப்போம்.

கடந்த தேர்தலில் எண்பது வீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் கட்சிக்கு இது ஒன்றும் முடியாத காரியமல்ல!

- *ஆசிரியர்*

# போதைக்கு அடிமையான 45ஆயிரம் பேர் இலங்கையில்

(கொழும்பு)

இலங்கையில் 45 ஆயிரம் பேர் போதை பாவனைக்கு அடிமையாகியுள்ளதாகவும் அவர்களை புனர்வாழ்விற்கு உட்படுத்தவென, கண்டி, நட்டம்புவ காலி மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் புனர்வாழ்வுமையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக திணைக்களத்தின் தலைவர் லீசாடி சில்வா தெரிவித்துள்ளதாவது.

போதைக்கு அடிமையான 2000 பேர் வருடாந்தம் தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர். ஆனால் 1000 பேருக்கு சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகளே உள்ளன. எனினும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வருடாந்தம் 2000 பேருக்கு சிகிச்சை அளித்துவருகின்றன.

போதைக்கு அடிமையானவர்களுக்கு மூன்று மாதகால தொழிற்பயிற்சி மற்றும் விசேட திட்டங்களை போதைப்பொருள் கட்டுப்பாட்டு திணைக்களம் வழங்கிவரும் அதேவேளை அவர்களை மன அழுத்தத்திலிருந்து விடுவிப்பதற்கான உதவித்திட்டங்களை சுகாதார அமைச்சு செயற்படுத்தி வருகின்றது.

20 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கண்டி புனர்வாழ்வு மையத்திலும் ஏனையவர்கள் அவர்களின் போதைப்பொருள் பாவனைக் கேற்ப வேறு புனர்வாழ்வு மையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

போதைப் பொருளுக்கு அடிமையாகி சிறையில் உள்ளவர்களுக்கான புனர்வாழ்வு முகாமொன்று கடந்த ஆகஸ்ட் மாதம் கந்தகாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கு இவர்களுக்கு ஒருவருட தொழிற்பயிற்சியும், மருத்துவ வசதிகளும் செய்யப்படுகின்றன.

அத்துடன் 15 அரசசார்பற்ற நிறுவனங்களும், தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் புனர்வாழ்வு முகாம்களை நடத்தி வருகின்றன. இவ்வாறு இயங்கும் புனர்வாழ்வு மையங்கள் கண்காணிக்கப்படுவதுடன் அவை உரியமுறையில் செயற்படுத்தப்படுகின்றதா எனவும் பரிசோதிக்கப்படுகின்றன.

போதைக்கு அடிமையானவர்கள் தொடர்பாக 1984 என்ற தொலைபேசி ஊடாக திணைக்களத்திற்கு அறிவிக்க முடியும்.

எமக்கு வாராந்தம் 250 தொடக்கம் 300 வரையான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவற்றை நாம் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் தலைமையகம், மதுவரித்திணைக்களம் மற்றும் தேசிய போதைப் பொருள் மருத்துவப் பிரிவிற்கு வழங்குகின்றோம்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனரமைக்கும் நான்கு புனர்வாழ்வு நிலையங்களிலுமுள்ளவர்களுக்காக மாதாந்தம் உணவு மற்றும் மருத்துவ தேவைகளுக்காக ஒரு மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# தாய்லாந்து பெண்களை நாடு கடத்த உத்தரவு

கொழும்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட தாய்லாந்து பெண்கள் உட்பட 7 பெண்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பகுதியில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிய பாலியல் தொழில் விடுதியை கடந்த 18 ஆம் திகதி சுற்றிவளைத்த பொலிஸார், அங்கிருந்த 6 தாய்லாந்து பெண்கள் மற்றும் ஒரு இலங்கைப் பெண்ணை கைது செய்தனர்.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்ட இவர்களை தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணையிலும் விடுதலை செய்யுமாறு நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

அத்துடன் தாய்லாந்து பெண்களை நாட்டை விட்டு வெளியேற்றுமாறும் அவர் உத்தரவிட்டார். அத்துடன் விடுதியை நடத்திய பீ. ருகுணுகே என்பவரை கைது செய்து விசாரணை நடத்துமாறும் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அந்த நபர் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட வேண்டும் என்றும் நீதவான் அறிவித்துள்ளார்.

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் பங்களாதேஷுடன் கைச்சாத்து

(கொழும்பு)

பங்களாதேஷுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளதாக இலங்கை வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் பங்களாதேஷ் முதல் தடவையாக இவ்வாறானதோர் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு தசாப்த காலத்துக்கு முன் இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட இவ் ஒப்பந்தத்தின் ஊடாக இரு நாடுகளும் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மிகைப்பட்ட வர்த்தக பரிமாற்றமொன்றில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரான்ஸில் வாழும் பெண்ணுடன் ஞானசார தேரருக்கு தொடர்பு

## அமைச்சர் மேர்வின் தெரிவிப்பு

பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பிரான்ஸில் வாழும் பெண்ணொருவருடன் தொடர்பு வைத்துள்ளதாக பொது உறவுகள் மற்றும் பொது விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண்ணுக்காக அவர் ராஜகிரிய பிரதேசத்தில் வீடொன்றை கொள்வனவு செய்துள்ளார் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஞானசார தேரர் போன்றவர்கள் ஜனாதிபதி அல்லது நாட்டின் மரியாதைக்குரிய பதவிகளுக்கு மக்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாது.

அவரை விட சிறந்த கல்வி அறிவும் மரியாதைகளைக் கொண்ட பிக்குமார் நாட்டில் உள்ளனர்.

ஞானம் என்ற பெயர் ஞானமுள்ள அறிவை குறிக்கின்ற போதிலும் அவ்வாறான ஞானம் ஞானசார தேரரிடம் இல்லை.

ஞானசார தேரர், அவருடைய பெயரை அஞ்ஞான சார என்று மாற்றிக்கொள்ள வேண்டும். இவர்களை போன்ற கொள்கைகளை கொண்டுள்ளவர்களை அனைத்து மக்களும் நிராகரித்துள்ளனர்.

ஞானசார தேரர் தான் அணிந்துள்ள காவியை தவறாக பயன்படுத்துவது இங்குள்ள முக்கியமான பிரச்சினை.

போர் நடைபெற்ற காலத்தில் ஞானசார தேரர் எங்கிருந்தார். அப்போது அவரை காணமுடியாதிருந்தது எனவும் அமைச்சர் மேர்வின் சில்வர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

Applications are invited by me up to 17.10.2014 from suitably qualified persons for the following posts.

1. **ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)**

**Qualifications:**

Should possess a Bachelor of Law Degree from a recognized University/HEI or Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/ Corporation or Reputed Private Sector Organization or official bar.

**Salary Scale** : U-EX 1(II) - Rs. 26,020 – 3x585 – 27,775 (EB) 28,420; 6x645; 6x585 – 35,800 p.m.

**Selection** : By Structured Interview.

2. **WORKSHOP ENGINEER GRADE III (University of Jaffna - Kilinochchi Premises )**

**Qualifications:**

a) Should possess a B.Sc. Engineering Degree specializing in Mechanical/ Production Engineering from a recognized University/ HEI.

**OR**

b) Should possess a National Diploma in Technology specializing in Mechanical/ Production Engineering or equivalent qualification, with at least seven (07) years of experience in Mechanical workshop of a recognized establishment.

**NOTE:** The in-plant training period shall not be counted for the period of experience.

**Salary Scale** : U-EX 1(II) - Rs. 26,020 – 3x585 – 27,775 (EB) 28,420; 6x645; 6x585 – 35,800 p.m.

**Selection** : By Structured Interview.

3. **UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna/ Vavuniya Campus/ University of Jaffna – Kilinochchi Premises)**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

**NOTE**: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale** : U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.

**Selection** : By Interview.

4. **CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/ Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 - 36,160/- p.m.

**Selection** : By Interview.

5. **MARSHAL GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

i. A Graduate from a recognized University
ii. Physique: Height : 5' 5"
Chest: 32" deflated

**Note**:- Preference will be given to those who show record of active participation in Sports Activities, Social Welfare Activities within the University or at National Level and those who have a background of Police or Armed forces.

**Salary Scale** : U-MN 2 (II) - Rs.19,470 – 18 X 245 - 23,880/- p.m.

**Selection** : By Interview.

6. **SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)**

**Qualifications:**

a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience that may be obtained while following the NCT course;

**OR**

b) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Salary Scale:** U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m

**Selection** : By Interview

7. **PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (III A) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Interview

8. **PUBLIC HEALTH NURSE (University of Jaffna)**

**Qualifications:**

a) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

**OR**

b) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

**Salary Scale** : U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

9. **NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

10. **RECORD KEEPER GRADE II (University of Jaffna)**

**Qualifications :**

i. Should have passed the G.C.E. (Ordinary Level) Examination in six subjects with 5 credits at not more than two sittings;

**AND**

ii. One year of experience in keeping records in a Record Room in the University System or Government Department/ State Corporation/ Recognized Institution.

iii. Good knowledge of Computer Literacy and Binding work.

NOTE: Preference will be given to those who have passed the GCE(A/L) examination in 03 subjects and have obtained the certificate issued by the Department of National Archives on completion of a 05 days course conducted for Record keeping.

**Salary Scale** : U-MN1 (IIIA) - Rs.16,070-17x155-18,705 p.m.

**Selection** : By Trade Test and Interview

11. **BOOK BINDER GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the 8th Standard and have at least 5 years' experience as a Book Binder in a recognized Institution;

**Salary Scale** :U-PL 3(III) Rs.15, 650 – 16x140 -17890.p.m

**Selection** : By trade test and interview

12. **MASON GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

i. Pass in the 8th standard
ii. Should be conversant with –
a. Brick work and the different types of courses used in the construction of wall footings, wall arches, taper pillars, chimneys, sewer chambers etc.;
b. All types of plaster, mixing and laying of reinforced concerted;
c. Reading plans and setting out foundations for simple constructions;
d. Colour washing including use of emulsion paint.
iii. Not less than 2 years' experience in masonry

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By trade test and interview

13. **MECHANIC GRADE II (University of Jaffna/ University of Jaffna – Kilinochchi Premises)**

**Qualifications**:

i. Pass in the 8th standard
ii. Should be conversant with
a. Reading scales, micrometers and recording fractional dimensions;
b. Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;
**and**
c. Reading and understanding drawings,
iii. Not less than 2 years' experience as a mechanic or machine Operator.

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By Trade test and interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**
***Note:*** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non –Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs. 100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please annexed copies of relevant documents)**

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

REGISTRAR 19/09/2014

(C/3520)

# . பொது நிர்வாக சேவையில் குறைபாடு
# ஒப்புக்கொள்கிறார் செனவிரட்ன



(கொழும்பு)

நாட்டின் பொதுநிர்வாக சேவைகளில் குறைபாடு காணப் படுவதாக பொது நிர்வாக சேவைகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன ஒப்புக்கொண்டுள்ளார். நாடாளுமன்றில் அவர் இதனை ஒப்புக் கொண்டுள்ளார்.

எனது உறவினர் ஒருவர் இருந்தார் அவர் ஓய்வு பெற்றுக்கொண்டார். ஓய்வூதியப் பணம் கிடைப்பதற்கு ஆறு ஆண்டுகள் கடந்தன.

ஓய்வூதியம் கணக்கிடு செய்யப்பட்டு பணம் வழங்கப்பட்ட போது அவர் இறந்திருந்தார்.

ஓய்வூதியம் வழங்கும் முறைமையில் பல்வேறு முறைகேடுகள் காணப்படுவதனை ஒப்புக் கொள்கின்றேன்.

அது தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைகேடுகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடாத்தப்படும்.

அரச ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்றுக்கொள்வதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே அறிவிக்கப்படும்.

ஒரு அரச ஊழியர் சில நேரங்களில் பல்வேறு நிறுவனங்களில் கடமையாற்றியிருக்கலாம், அவ்வாறு கடமையாற்றியவர்களின் சகல தரவுகளையும் திரட்டிக் கொள்வதில் கால தாமதம் ஏற்படுகின்றது.

உயிரிழந்தவர்களுக்கு சில பிரதேச செயலகங்களில் தொடர்ச்சியாக ஓய்வூதியப் பணம் வழங்கப்படுகின்றது.

சிலருக்கு இரண்டு கோப்புக்களின் அடிப்படையில் இரண்டு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வகையில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் மாற்றம் கொண்டு வரப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நாடுகடத்தல் ஒப்பந்தம்
# ரஷ்யா - இலங்கை கைச்சாத்து

(கொழும்பு)

ஆட்களை நாடு கடத்துவது தொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கையுடன் கைச்சாத்திடுகிறது ரஷ்யா. இதற்கான அனுமதியை ஜனாதிபதி விளாடிமிர் புடின் ரஷ்ய நீதி அமைச்சுக்கு வழங்கியுள்ளார்.

இந்தத் தகவலை அந்த நாட்டின் நீதி தொடர்பான தகவல்களை வழங்கும் உத்தியோகபூர்வ இணையத்தளம் வெளியிட்டுள்ளது. ஆட்களை நாடு கடத்தும் ஒப்பந்தத்தில் ரஷ்யாவுடன் கைச்சாத்திடுவதற்கு ஏற்கனவே இலங்கையின் அமைச்சரவை அங்கீகாரமளித்துவிட்டது. ஆட்களை நாடு கடத்துவது தொடர்பிலான ஒப்பந்தத்தில் இந்தியா, சீனா, மொங்கோலியா, வடகொரியா, ஈரான், ஈராக், யேமன், மற்றும் வியட்நாம் ஆகியவை உட்பட 30 நாடுகளுடன் ரஷ்யா ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளது.

# மாணிக்க கல் அகழ்வில் ஈடுபட
# வெளிநாட்டவருக்கு அனுமதி இல்லை
## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மாணிக்க கல் அகழ்விற்கு வெளிநாட்டு பிஜைகளுக்கோ வெளிநாட்டு நிறுவனங்களுக்கோ அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை என சுற்றாடல்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மாணிக்க கல் வர்த்தக நடவடிக்கையில் வெளிநாட்டவர்கள் ஈடுபட முடியுமே தவிர மாணிக்க கல் அகழ்வில் ஈடுபட முடியாது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரத்தினபுரி மற்றும் எஹலியகொட பகுதிகளில் மாணிக்க கல் அகழ்வில் ஈடுபடுவோர் மற்றும் இரத்தினக் கல் மற்றும் சுவர்ணாபரண அதிகார சபையின் பிரதிநிதிகள் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



வெளிநாட்டவர்களுக்கு மாணிக்க கல் அகழ அனுமதிப் பத்திரம் வழங்கினால் உள்நாட்டு அகழ்வுப் பணியாளர்களின் நிலைமையில் ஏற்படும் பாதிப்பை கருத்திற் கொண்டு அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

# அரசாங்கத்தை சங்கடப்படுத்தவே
# இராணுவம் மீது சந்திரிகா குற்றச்சாட்டு
## பாதுகாப்பு அமைச்சு விசனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இராணுவம் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கருதி அரசாங்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்கும் செயலென பாதுகாப்பு அமைச்சு குற்றம் சாட்டியுள்ளதாக ஜலண்ட் தெரிவித்துள்ளது.

சில அரசியல்வாதிகள், போருக்குப் பின்னர் இராணுவத்தின் செயற்பாடுகளை தேவையற்ற வகையில் சித்தரித்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாடு இன்று இராணுவத்தின் கைகளுக்கு போய் விடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக சந்திரிகா அண்மையில் தெரிவித்திருந்தார்.

பொதுமக்களின் வாழ்க்கையில் இராணுவம் தலையிடுவதாக கூறியே இந்த அச்சத்தை அவர் வெளியிட்டிருந்தார்.

இன்று வீதிகளை சுத்தப்படுத்தல் முதல், பாதையமைப்பு மற்றும் கான்களை சுத்தப்படுத்தல் போன்ற பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அத்துடன் தமது வீடுகளை உளவு பார்ப்பதாகவும் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பதாகவும் சந்திரிகா தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள பாதுகாப்பு அமைச்சு இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேறக்கோரும் நடவடிக்கை போன்றே சந்திரிகாவின் கருத்தும் அமைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 தேசிய தேர்தல்களுக்கு
# தயாராகுமாறு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் இரண்டு தேசிய தேர்தல்களுக்கு தயாராகுமாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் அனைத்து தொகுதி அமைப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் டீ.எம்.ஜயரத்னவின் தலைமையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் தொகுதி அமைப்பாளர்களுக்கான சந்திப்பு நடைபெற்றது.

இதன் போது இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்தச் சந்திப்பில் வைத்து, ஊவா மாகாணசபைத் தேர்தலின் வெற்றிக்காக உழைத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# சிறைச்சாலை குறைபாடுகளை
# ஐ.தே.க.வினர் பார்வையிடுவர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சிறைச்சாலைகளைப் பார்வையிடவுள்ளனர்.

சிறைச்சாலைகளில் உள்ள குறைபாடுகளை கண்டறியும் நோக்கில் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிறைச்சாலைகளை பார்வையிடவுள்ளனர்.

எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எந்தெந்த சிறைச்சாலை எப்போது என்ற விடயங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடச் சென்ற போது ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையான எதிர்ப்பை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கில் பெண்களுக்கான
# கடன் மீளச் செலுத்தல் இரத்து?

(கொழும்பு)

வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் வீட்டின் வருமானத்தை அதிகரிக்கும் வகையிலும் வடக்கு, கிழக்கில் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.


இதனடிப்படையில் கடந்த ஐந்து வருடங்களில் 141, 320 பெண்களுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய மற்றும் ஒத்துழைப்புத்துறை பிரதி அமைச்சர் சரத் அனுமுகம இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த கடன்கள் பல்வேறு அரச வங்கிகளின் ஊடாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல், இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள வறட்சியை கருத்திற் கொண்டு இந்தக் கடன்களை மீளச்செலுத்தல், இரத்துச் செய்யப்படலாம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# பௌத்தர்களை பார்த்து குரைத்தவர்கள்
# ஊவாவில் நல்ல பாடம் கற்றனர்
## என்கிறார் ஞானசார தேரர்

பௌத்தர்களைப் பார்த்து குரைத்தவர்களுக்கு இம்முறை ஊவா மாகாண சபைத் தேர்தல், நல்லதொரு பாடத்தை கற்பித்திருக்கிறது என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்தர்களைப் பார்த்து குரைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிறந்த மண்ணில் இன்று நாம் தேவையற்றவர்களாகி உள்ளோம். பௌத்த தர்மத்துக்கு ஏற்ப வாழும் நாடொன்று அவசியம். அந்த மாற்றத்துக்காக இந்த நாடு அணிவகுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகிலுள்ள அனைத்து தலைவர்களும் தங்களது வரலாற்றின் அடி, நுனியைத் தேடிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், எமது நாட்டின் தலைவர்கள் அது தொடர்பில் வாய் திறப்பதில்லை. இந்த நாட்டு அரசியல்வாதிகள் தொடர்பில் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். நாடாளுமன்றத்திலுள்ள எம்.பி.க்களில் நூற்றுக்கணக்கானோர், சாதாரண தரம் கூட சித்தியடையாதவர்கள். சிங்கள பௌத்தர்களைப் பார்த்து குரைப்பவர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று ஞானசார தேரர் மேலும் கூறினார்.

# புத்தளத்தில் அதிகரித்த
# எயிட்ஸ் நோயாளிகள்

(கொழும்பு)

புத்தளம் பிரதேசத்தில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருப்பதாக சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த எட்டு மாத காலத்திற்குள் புத்தளம் பகுதியில் இருந்து 12 எயிட்ஸ் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்று பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

கடந்த ஆண்டு முழுவதிற்குமான காலப்பகுதியில் புத்தளம் பிரதேசத்தில் இருந்து ஐந்து எயிட்ஸ் நோயாளிகள் மட்டுமே கண்டறியப்பட்டிருந்தனர். எனினும் இந்த ஆண்டு நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இதற்கிடையே இந்த ஆண்டில் மட்டும் நாடு முழுவதிலும் இருந்து சுமார் இரண்டாயிரம் எயிட்ஸ் நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.





திருமறைக் கலாமன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் கலை விழாவில் நாவாந்துறை றோ.க பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனம், திருமறைக் கலா மன்றம் தயாரித்து வழங்கிய "குசேலர்" இசை நாடகம் இடம்பெறுவதைக் காணலாம். (48)

# பிரயோசனமற்ற எரிபொருள் நிலையம்

## நெடுங்கேணி மக்கள் குற்றச்சாட்டு

(நெடுங்கேணி)

நெடுங்கேணி எரிபொருள் நிலையம் கடந்த யூன் மாதத்தில் இருந்து டீசல் முடிவடைந்த நிலையிலும், யூலை மாதத்திலிருந்து பெற்றோல் முடிவடைந்த நிலையிலும், ஆகஸ்ட் மாதத்திலிருந்து மண்ணெண்ணெய் முடிவடைந்த நிலையிலும மூடப்பட்டுள்ளது.

தற்போது கால போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மக்கள் உழவு இயந்திரங்களுக்கு தேவையான எரிபொருட்களைப் பெற்றுக் கொள்ள ஒட்டுசுட்டான், முள்ளியவளை, புளியங்குளம் ஆகிய எரிபொருள் நிலையங்களுக்கே செல்லவேண்டியுள்ளது.

இதனால் உரிய நேரத்தில் விவசாயிகள் தங்கள் விவசாய செய்கையினை செயகை பண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் எரிபொருள் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஒரு மாத காலத்துக்குள் நெடுங்கேணி தனியார் எரிபொருள் வாணிபங்களுக்கு பொலிஸாரின உதவியுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிமையாளர்களுக்கு தண்டப்பணமும் அறவிடப்பட்டதுடன் இவ் எரிபொருள் வாணிபம் பூட்டப்பட்டடுள்ளது.

நெடுங்கேணி எரிபொருள் நிலைய உரிமையாளர்களினால் கடந்த 4 மாதமாக எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் முடிவடைந்த நிலையில் அதனை மீள் நிரப்ப முடியாத நிலை காணப்படுவதுடன் இப் பகுதி மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு வந்து சீர் செய்து தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (40)

# பிற்போடப்பட்டது பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா நவமபர் மாதம் 10 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆறாம் திகதி இடம்பெற ஏற்பாடாகி இருந்த இப் பொதுப் பட்டமளிப்பு விழா சில கற்கை பீடங்களின் பரீட்சை முடிவுகள் வெளியாவதில் ஏற்பட்ட தாமதங்களினா லேயே பிற்போடப்பட்டுள்ளதா கவும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பட்டமளிப்பு விழாவை நடாத்த பேரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் துணை வேந்தர் மேலும் தெரிவித்தார். (இ)

## உணவுப் பொருட்கள் வேலணையில் வழங்கல்

வேலணை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மாற்றுவலுகொண்டவர்களுக்கான ஆயிரம் ரூபா பெறுமதியான உபஉணவுப்பொருட்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

இந்தப் பொருட்களை வேலணைப்பிரதேச செயலர் திருமதி. மஞ்சுளா சதீஷன், வேலணை பிரதேச சபையினது தவிசாளர் சின்னையா சிவராசா (போல்) ஆகியோர் வழங்கிவைத்தனர்.

இந்த உணவுப் பொதி வழங்கலால் மாற்றுவலுவுடையோர் பலர் பயன்பெற்று வருகின்றனர். மேலும் கரித்தாஸ் கியூ டெக் நிறுவனத்தினரால் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# நவராத்திரி விழா

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரும் வேலணை பிரதேச செயலக இந்து கலாசார திணைக்களத்தின் அபிவிருத்திப்பகுதியினரும் இணைந்து நடாத்தும் நவராத்திரிவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு அமுதசுரபி அன்னதானசபையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலகத்தின் இந்து காலாசார பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.விஜிதா தவசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட கமநல சேவை நிலையத்தின் முன்னாள் பெரும்பாக உத்தியோகத்தராகவும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரியாகவும் இருந்த நா.யோகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பரிபாலனசபையின் உபதலைவர் அ.சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவில் அமுதசுரபி அன்னதான சபையின் முன்பள்ளி மாணவர்களினது கலைநிகழ்ச்சிகளும் பெரியார்களினது சமயச், சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (05)

## முரசின் இன்றைய பலன்



(26.09.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி.
மரணயோகம் - துதியைத்திதி.
சித்திரை நட்சத்திரம் முன்னிரவு 09.39 வரை. பின் சுவாதி.
இராகு காலம் 10.32 - 12.02 வரை. சுபநேரம் 06.02 - 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** இயன்றவரை பிறர்விடயத்தில் தலையிடுவதைத் தவிர்த்தல் நன்று, கைவீட்டிருந்த உறவினர் நட்புக்காக மனைதேடி வரநேரிடும்.

**ரிஷபம்** மிதிவண்டிப்பிரயாணத்தை மேற்கொள்வதைக் கைவிடின் விபத்தில்லை, சகோதரர் உதவி கேட்டுவரும் போது இயன்றளவு கொடுப்பது பின்னர் நலம்பயக்கும்.

**மிதுனம்** விவாப்பேச்சு வார்த்தை மாமனாரின் தலையீட்டினால் வெற்றியைத்தரும், பெற்றோரின் நோய் நிலை காரணமாக தெய்வதலத்திற்கு செல்லல்.

**கடகம்** மகளின் நடவடிக்கையை எண்ணி கவலைப்படல், நோய் உபாதையால் கஷ்ரப்படல்.

**சிம்மம்** அனுப்பிய பணத்திற்கு துணைவர் கணக்குகேட்டதனால் ரகளை உருவாதல், ஆவணம் இன்மையால் வாகனத்தை வெளியே எடுக்க அச்சம் ஏற்படல்.

**கன்னி** மேலதிகாரியுடன் ஒத்துப்போவதால் பதவி உயர்விற்கு சிபார்சு செய்யப்படல், டெங்கு பரவக் காரணமாக சுற்றாடலை வைத்திருந்ததால் எச்சரிக்கை செய்யப்படல்.

**துலாம்** ஏழரைச் சனி இருப்பதினால் புதிய பிரவேசத்திற்கு தயக்கம் ஏற்படல், மிருகம் குறுக்கே பாய்வதினால் மயிரிழையில் விபத்து ஏற்படாது தப்பிவிடல்.

**விருச்சிகம்** இடைத்தங்கல் நாட்டினை கைவிட்டு சொந்தநாட்டுக்கு திரும்பிவர உத்தேசித்தல், பழுதான உணவுப்பொருளினால் தேகநலம் பாதிக்கப்படல்.

**தனுசு** பத்துரூபா தட்டுப்பாடு காரணமாக மிகுதிப்பணம் கொடுப்பதில் தில்லுமுல்லு ஏற்படல், குடும்பப்பிரச்சினையில் அயலவரின் தலையீட்டை வெறுத்ததினால் முரண்பாடு ஏற்படல்.

**மகரம்** எட்டாமிடத்தில் சனீஸ்வரர் இருப்பதினால் இன்றைய பொழுதினை அவதானமாக கழிக்கவும், புதியன கொள்வனவு செய்ய நேரிட்டால் காலாவதித்திகதியை நன்கு பாருங்கள்.

**கும்பம்** கல்வி முயற்சிக்காக தொலை தூர இடத்திலிருந்து நகரம் வர முயற்சித்தல், கவலையைத்தக்க வைத்து கருமமே கண்ணாக இருத்தல்.

**மீனம்** புதிய ஒப்பந்ததில் கைச்சாத்திடுவதை துணைவி விரும்பாமையால் கைவிடல், புத்திரபாக்கியம் கிடைக்க வாய்ப்புக்கிட்டல்.

# வெகுவிரைவில் மூடப்படவுள்ளது பாரம்பரிய பலாலி ஆசிரியர் கலாசாலை

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் எவரும் இல்லாத நிலையில் அதிபர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் சில சிற்றூழியர்களுடனும் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் உள்ள சின்ன முத்துத்தம்பி வித்தியாசாலையில் மிகவும் பரிதாப நிலையில் இயங்கி வருகிறது.


விரிவுரையாளர் ஒருவர் கூட இல்லாத இந்தக் கலாசாலை இன்னும் சில நாட்களில் மூடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக் கலாசாலையின் அவல நிலை பற்றியும், விரைவில் இதற்கான மூடு விழா நடாத்தப்படலாம் எனவும் செய்திகள் வெளிவந்த நிலையில் எந்தவொரு தமிழ் அரசியல்வாதிகளும் இதில் தலையிட்டு இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்வரவில்லை எனப் பல கல்விமான்களினால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கலாசாலையில் உள்ள பல பொருட்கள் ஏலம் விடப்படவிருப்பதாகவும் கடைசியாக ஆங்கிலக் கற்கை நெறியை மேற்கொண்ட ஆசிரிய மாணவர்கள் பாவித்த சில கதிரைகள் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் சில தளபாடங்கள் வேறு அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. விரைவில் இங்குள்ள அதிபர், உத்தியோகத்தர், சிற்றூழியர்கள் வேறு இடங்களுக்குமாற்றம் செய்யப்பட்டு பலாலி ஆசிரியர் கலாசாலை மூடப்படலாம் எனத் தெரியவந்துள்ளது.

பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படட மாணவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுப்பப்பட்டு 649 மாணவர்கள் அங்கு பலத்த இட நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது கல்விச் செயற்பாட்டைத் தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரியர் கலாசாலை மூடப்பட்டால் யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும், கல்வியியற் கல்லூரியும் மட்டுமே ஆசிரியர் பயிற்சிக்காக மீதமாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. சிறிய தொரு குறுகிய இடத்தில் விளையாட்டு மைதானம், ஆய்வு கூட வசதி, நூல்நிலையம் போன்ற எதுவித வசதியுமின்றி பலத்த வளப் பற்றாக் குறைகளின் மத்தியில் கடந்த பல வருடங்களாக இக் கலாசாலை திருநெல்வேலி சின்ன முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இயங்கி வந்தது. பரந்த இடமொன்றில் பலாலி ஆசிரிய கலாசாலையை இடம் நகர்த்தி அங்கு இதனை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளைப்பல கல்விமான்கள் மேற்கொண்டபோதும் அது முடியாமல் போயிற்று.

இது சம்பந்தமாக தமிழ் அரசியல் தலைமைகள், அரசியல்வாதிகள் மௌனம் சாதிப்பது ஏன் எனத் தெரியவில்லை எனக் கல்விச் சமூகம் ஆச்சரியம் தெரிவித்துள்ளது. மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதும், அதிகளவிலான கல்விமான்களை உருவாக்கியதுமான பலாலி ஆசிரியர் கலாசாலையை மூடவிடாமல் பாதுகாப்பதில் அனைத்துக் கல்வியியலாளர்களும் ஒன்று சேர்வதுடன், அரசியல் துறைசார்ந்தவர்களும் ஒன்று கூட வேண்டும் எனப் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (137)



## அரையிறுதியில் கொல்கத்தா

(ஹைதராபாத்)

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் பேர்த் அணியை 3 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அரையிறுதிக்கும் முன்னேறியது.

6ஆவது சம்பியன் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இதில் கொல்கத்தா மற்றும் பேர் அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று முன்தினம் இரவு ஹைதராபாத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய பேர்த் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் அடம் வோக்ஸ் 71, கிரேக் சிமோன்ஸ் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன் நான்கு, குல்தீப் யாதவ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா அணி 19.4 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில சூர்யகுமார் யாதவ் 43 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். 3ஆவது வெற்றியை புசித்த கொல்கத்தா அணி இதன் மூலம் முதல் அணியாக அரையிறுதியையும் எட்டியது. மொத்தத்தில் 20 ஓவர் கிரிக்கெட்டில் கொல்கத்தா தொடர்ச்சியாக பதிவு செய்த 12ஆவது வெற்றி இதுவாகும்.

CHAMPIONS LEAGUE TWENTY20

**பார்படோஸ் டிரென்ட்ஸ் எதிர் கேப் கோப்ராஸ்**
**இடம் : மொகாலி**
**நேரம் : மாலை 4 மணி**

**கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் நொதேன் அணி இடம் : மொகாலி**
**நேரம்: இரவு 8 மணி**

# தலைமைத்துவப் பயிற்சியாளராக அத்தப்பத்து நியமனம்

இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக மார்வன் அத்தப்பத்து நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்து வந்த போல் பார்பிராஸ் (இங்கிலாந்து) கடந்த ஏப்ரல் மாதத்தில் அந்தப் பதவியில் இருந்து விலகினார். இதன் பின் இலங்கை அணியின் முன்னாள் கப்டன் மார்வன் அத்தப்பத்துஇடைக்கால பயிற்சியாளராக இருந்தார். இந்த நிலையில் புதிய தலைமைப் பயிற்சியாளராக யாரை நியமிப்பது என்பது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை ஆலோசனை நடாத்தி வந்தது. பயிற்சியாளர் பட்டியலில் அத்தப்பத்து, ஜோன் லீவிஸ் (இங்கிலாந்து) ஆகியோரின் பெயர் இருந்தது. இதில் அத்தப்பத்துவை புதிய தலைமைப் பயிற்சியாளராக இலங்கை கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது. 15 ஆண்டுகளுக்கு பின்னர் உள்ளூரைச் சேர்ந்த ஒருவர் இலங்கை அணியின் முழு நேர பயிற்சியாளராக நியமிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும். கடைசியாக 1999ஆம் ஆண்டில் இலங்கையைச் சேர்ந்த ரொய் டயாஸ் பயிற்சியாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சகோதரனின் கிரிக்கெட் வாழ்வை அழித்துவிட்டது பி.சி.சி.ஐ.



பாகிஸ்தான் தேர்வுக்குழுவினரும், அணி நிர்வாகமும் எனது இளைய சகோதரர் உமர் அக்மலின் கிரிக்கெட் வாழ்க்கையை அழித்துவிட்டனர் என பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரும், விக்கெட் காப்பாளருமான கம்ரன் அக்மல் குற்றம் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் அணியில் இருந்து ஓரம் கட்டப்பட்டுவிட்ட கம்ரன் அக்மல் மேலும் கூறியதாவது: ருவென்ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் உமர் அக்மலை தொடர்ந்து விக்கெட் காப்பாளராக பயன்படுத்தி வருவதால் அவர் அதிருப்தியில் உள்ளார். கிரிக்கெட் சபையின் இந்தச் செயல் நியாயமற்றது. ஏனெனில் உமரின் முக்கியமான பணி துடுப்பாட்டப் பணிதான்.

விக்கெட் காப்பாளராக செயற்படுவது அல்ல. துடுப்பாட்டம், விக்கெட் காப்பாளர் என இரு பொறுப்புகளை கையாள்வதை உமர் விரும்பவில்லை. அது அவருடைய துடுப்பாட்டத்தை பாதிக்கிறது. இது தொடர்பாக பாகிஸ்தான் சபையிடம் அவர் கூறியபோதிலும், அவர்கள் அதை கண்டுகொள்ளாமல் விக்கெட் காப்பாளராக செயற்படுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அவர் விடயத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியாயமற்ற முறையில் நடந்து கொள்கிறது. தேர்வாளர்கள், அணி நிர்வாகத்துடன் இணைந்து இளம் வீரர்களை நல்ல முறையில் உருவாக்க வேண்டும்.

அவர்களின் வாழ்க்கையை அழிக்கக்கூடாது. உமர் அக்மல் இப்போதும் இளம் வீரர்தான். அவரை துடுப்பாட்டத்தில் மட்டும் கவனம் செலுத்த அனுமதித்தால் பாகிஸ்தானுக்காக இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாக விளையாடுவார் என்றார்.

# ஆஸி.யுடனான தொடர் கழற்றிவிடப்பட்டார் யுனிஸ்

(கராச்சி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணியிலிருந்து சிரேஷ்ட வீரர் யுனிஸ் கான் நீக்கப்பட்டார்.

அடுத்த மாதம் ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.,), பாகிஸ்தான், அவுஸ்ரேலிய அணிகள் ஒரே ஒரு சர்வதேச ருவென்ரி-20, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றன. ருவென்ரி-20 போட்டி எதிர்வரும் ஒக்ரோபர் 5இல் டுபாயில் நடைபெறவுள்ளது. ஒருநாள் தொடரின் முதல் போட்டி வரும் ஒக்ரோபர் 7இல் சார்ஜாவில் நடைபெறவுள்ளது. மீதமுள்ள போட்டிகள் டுபாய் (ஒக்., 10), அபுதாபியில் (ஒக்., 12) நடைபெறவுள்ளன. இரண்டு டெஸ்ட் போட்டிகள் டுபாய் (ஒக்., 22-26), அபுதாபியில் (ஒக்., 30 - நவ., 3) நடைபெறவுள்ளன.

இத்தொடருக்கான ஒரு நாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிக்கான அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு நாள் போட்டிக்கான அணியிலிருந்து யுனிஸ்கான் நீக்கப்பட்டுள்ளார். இதேவேளை, டெஸ்ட் போட்டிக்கான அணியில் யுனிஸ்கானுக்கான வாய்ப்பு நிச்சயம் இருக்கும் என கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் அணி: மிஸ்பா (கப்டன்), மொகமட் ஹபீஸ், அகமது சேஷாத், உமர் அக்மல், உமர் அமின், மக்சோத், ஆசாத் ஷபிக், பவாத் ஆலம், சர்பராஸ் அகமது, அப்ரிடி, ரெஜா ஹசன், மொகமட் இர்பான், அன்வர் அலி, வாகாப் ரியாஸ், யுனைட் கான்.

ருவென்ரி-20 அணி: அப்ரிடி (கப்டன்), அகமட் சேஷாத், மொகமட் ஹபீஸ், உமர் அக்மல், உமர் அமின், மக்சோத், ஓவைஸ் ஜியா, சாத் நசீம், ரெஜா ஹசன், மொகமட் இர்பான், வாகாப் ரியாஸ், பிலாவல் பாட்டி, அன்வர் அலி, சோகைல் தன்வீர்.




# தலைமைக்கு ஆபத்தில்லை


(லண்டன்)

இலங்கைக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணியின் கப்டனாக அலெஸ்டர் குக் நியமிக்கப்பட்டார். தவிர இவர், அடுத்த ஆண்டு அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் (50 ஓவர்) தொடரிலும் இங்கிலாந்து அணியை வழி நடாத்த உள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கை செல்லவுள்ள இங்கிலாந்து அணி, 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது. இதற்கு முன், இலங்கை ஏ அணியுடன் இரண்டு 50 ஓவர் பயிற்சிப் போட்டிகளில் (நவ., 21, 23) விளையாடுகிறது. ஒருநாள் தொடருக்கான போட்டிகள், கொழும்பில் (நவ., 26, 29, டிச., 6, 16), அம்பாந்தோட்டையில் (டிச., 3), பல்லேகலயில் (டிச., 10, 13) மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இத்தொடரில் பங்கேற்கும் 16 பேர் கொண்ட இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. கப்டனாக அலெஸ்டர் குக் நியமிக்கப்பட்டார். தவிர இவர், அடுத்த ஆண்டு அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் (50 ஓவர்) தொடரிலும் இங்கிலாந்து அணியின் கப்டனாக செயற்படுவார் என இங் கிலாந்து கிரிக்கெட் சபை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற இன்னும் குறுகிய காலமே இருக்கின்றது. இந்தக் காலப்பகுதிக்குள் புதிய கப்டன் ஒருவரை நியமிப்பதன்



மூலம் இருப்பதையும் இல்லாமல் செய்துவிடும் நிலையையே உருவாக்கும். அதைவிட குக்கிடமே தலைமைப் பொறுப்பை வழங்குவது என்ற முடிவிற்கு வந்தோம் என இங்கிலாந்து கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி விபரம்: அலெஸ்டர் குக் (கப்டன்), மொய்ன் அலி, ஜேம்ஸ் அண்டர்சன், இயன் பெல், ரவி போபரா, ஜோஸ் பட்லர், ஸ்டீபன் பின், ஹரி கர்னே, அலெக்ஸ் ஹேல்ஸ், கிறிஸ் ஜோர்டான், இயன் மோர்கன், ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் ரெய்லர், ஜேம்ஸ் டிரட்வெல், கிறிஸ் வோக்ஸ்.

# பதக்கப் பட்டியல்

தென் கொரியாவின் இன்ச்சான் நகரில் 17ஆவது ஆசிய விளையாட்டு விழா நடைபெற்று வருகின்றது. இதில் பதக்கப் பட்டியலில் முன்னணியில் உள்ள நாடுகளின் விபரம் வருமாறு:

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 70 | 34 | 29 | 133 |
| தென் கொரியா | 28 | 29 | 26 | 083 |
| ஜப்பான் | 20 | 30 | 28 | 078 |
| கஜகஸ்தான் | 06 | 07 | 14 | 027 |
| வடகொரியா | 04 | 05 | 08 | 017 |
| மங்கோலியா | 04 | 03 | 06 | 13 |
| சீன தைபே | 04 | 03 | 06 | 013 |
| ஈரான் | 03 | 06 | 04 | 013 |
| ஹொங்கொங் | 02 | 05 | 12 | 019 |
| மலேசியா | 02 | 03 | 03 | 008 |
| மியான்மார் | 02 | 00 | 00 | 002 |
| வியட்னாம் | 01 | 04 | 14 | 019 |
| சிங்கப்பூர் | 01 | 02 | 06 | 009 |
| குவைத் | 01 | 02 | 00 | 003 |
| இந்தியா | 01 | 01 | 13 | 015 |

# குடாநாட்டு விளையாட்டுத் தர வீழ்ச்சிக்கு கடந்த காலப் போர்ச் சூழலே காரணம்

## யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் பயிற்றுநர் சுரேஷ்மோகன்



(யாழ்ப்பாணம்)

ஒரு தசாப்த கால இடைவெளிக்குள் இலங்கை பாடசாலை கிரிக்கெட் தரம் இரண்டிற்கு நாங்கள் முன்னேறியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இருப்பினும், கடந்த கால போர்ச் சூழல் காரணமாகவே எங்கள் மாவட்டத்தின் விளையாட்டுத்தரம் முன்னேற்றம் அடைய முடியாமல் போனதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது என யாழ். மத்திய கல்லூரியின் கிரிக்கெட் பயிற்றுநர் சுரேஷ்மோகன் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி தோல்வியைத் தழுவிய போதிலும் இறுதிப் போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி அணி முன்னேறியதன் மூலம் பிரிவு இரண்டு போட்டிகளில் பங்கு பற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. யாழ். மாவட்டத்தில் பிரிவு இரண்டு போட்டிகளில் யாழ். இந்துக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றி வருகின்றன. இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் நான்காவது பாடசாலையாக யாழ். மத்திய கல்லூரி அணி முன்னேறியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கை யிலேயே சுரேஷ்மோகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2004 ஆம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித் தொடரின் அரையிறுதியில் தோல்வியைத் தழுவியிருந்தோம். அதில் வெற்றி பெற்றிருந்தால் அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட் தரம் இரண்டிற்கு முன்னேறியிருந்திருப்போம். அந்த வாய்ப்பை அன்று நாம் கோட்டைவிட்டோம். அந்த வாய்ப்பை அடுத்தடுத்த வருடங்களில் அடைய பெரு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் போர்ச் சூழல் காரணமாக அதனை நெருங்க முடியவில்லை. இந்நிலையில் ஒரு தசாப்த கால இடைவெளியின் பின்னர் கிரிக்கெட் தரம் இரண்டிற்கு முன்னேறியிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இதற்கு வீரர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பயிற்சி, கல்லூரிச் சமூகம் அளித்த ஒத்துழைப்பு, குறிப்பாக, அதிபர் எங்களுக்கு அளித்த ஊக்கம் என்பனவே காரணம்.

இந்த நிலையைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதற்கு கடுமையாக முயற்சிப்போம். அவ்வாறு தக்கவைத்துக் கொள்ளப்படும் பட்சத்தில் யாழ். மாவட்ட கிரிக்கெட் வீரர்களின் தரமும் மேலும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்.பி.)

## கிளிநொச்சி, மன்னார் பொலிஸ் அணிகள் மோதல்

(மன்னார்)

அகில இலங்கை பொலிஸ் அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் மாவட்ட பொலிஸ் நிலைய அணிகள் பங்கு கொள்கின்றன. இதில் மன்னார் மாவட்ட பொலிஸ் அணிக்கும், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அணிக்குமிடையிலான போட்டி ஒன்று எதிர்வரும் 3ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, மன்னார் பொலிஸ் அணி சிநேகபூர்வமான கால்பந்துப் போட்டியில் தள்ளாடி இராணுவ முகாம் அணியை வீழ்த்தியுள்ளது. மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மன்னார் பொலிஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அகில இலங்கை பொலிஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் சாதிக்க வேண்டும் என்ற வேகத்தோடு நாம் செயற்பட்டு வருகின்றோம். இதன் காரணமாகவே பயிற்சிப் போட்டிகள் பலவற்றில் மோதி வருகின்றோம்.

வலுவான அணியாக நாம் திகழ்வதால் நிச்சயம் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு அதிகம் எமக்கிருப்பதாக உணர்கின்றோம் என மன்னார் மாவட்ட பொலிஸ் அணிக் கப்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்டாவளை, பூநகரி அணிகள் சம்பியன்

(பளை)

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் சம்பியன் பட்டத்தை கண்டாவளை மற்றும் பூநகரிப் பிரதேச செயலக பணியாளர்கள் அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான வலைப்பந்து மற்றும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணியும் கண்டாவளை பிரதேச செயலக பணியாளர்கள் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கண்டாவளை பிரதேச செயலக பணியாளர்கள் அணி 11-09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணியும் பூநகரி பிரதேச செயலக பணியாளர்கள் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பூநகரி பிரதேச செயலக பணியாளர்கள் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் ஏனைய போட்டிகள் மக்கள் சேவை பாதிக்காத வகையில் அட்டவணையிடப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (81)

## அரச அதிபர் வெற்றிக் கிண்ண பட்மின்ரன் சம்பியன் பட்டம் வென்ற அணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண பட்மின்ரன் போட்டியில் யாழ். மாவட்ட செயலகம் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பணியாளர்கள் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தினால் நான்காவது ஆண்டாக நடாத்தப்படும் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் முதற்போட்டியாக ஆண், பெண்களுக்கான பட்மின்ரன் ஆட்டம் கடந்த 2,4,6 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

ஆண்களுகான போட்டியில் யாழ். மாவட்ட செயலகம் முதலாமிடத்தையும், ஊர்காவற்றுறை பிரதேச செயலக பணியாளர்கள் அணி இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. இதேவேளை, 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான போட்டியில் யாழ். மாவட்ட செயலக அணி முதலாமிடத்தையும், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

பெண்களுக்கான போட்டியில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பணியாளர்கள் அணி முதலாமிடத்தையும், நல்லூர் பிரதேச செயலக பணியாளர்கள் அணி இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இப்போட்டித் தொடரின் ஏனைய விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (எஸ்.பி.)

## விரைவில் ஆரம்பம்

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான சூப்பர் குறூப் கிரிக்கெட் சுற்றுப் போட்டி விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டிக்கு யாழ் மாவட்டம் சார்பாக யாழ் மத்தி,கொக்குவில் இந்து, சென். ஜோண்ஸ் அணிகள் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் நடாத்திய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட வேலணை துறையூர் ஐயனார் பி அணியைக் காணலாம். அண்மையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் துறையூர் ஐயனார் ஏ அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (21)




# யாழ்ப்பாணத்தில் பத்திரிகைச் சுதந்திரம் படும்பாடு!

அண்மையில் தமிழ் மொழியில் பயிற்சி பெற்ற 1633 இராணுவத்தினருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் காங்கேசன் துறையிலுள்ள "தல்செவன" விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுக் கலந்து கொண்டார். அவருடன் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொண்டார்.

இந்த இருவரும் கலந்து கொண்டமை சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை மோசமாக வசைபாடித் தீர்த்திருக்கிறது. குறிப்பாக தற்போதைய துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் மீது அவதூறு சேற்றை வாரி இறைத்திருக்கிறது.

இதன்போது யாழ்.பல்கலைக் கழக மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் இராணுத்தினர் அச்சுறுத்துவதற்கு துணை வேந்தர் உதவியாக இருந்து வந்துள்ளார் என்ற பாரதூரமான ஒரு குற்றச்சாட்டையும் அப்பத்திரிகை அவர் மீது சுமத்தியுள்ளது.

இலங்கையின் ஒரு உயர்கல்வி நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த நிர்வாகி மீதான தமிழரசுக் கட்சிப் பத்திரிகையின் இத்தகைய எழுந்தமானக் குற்றச்சாட்டு பத்திரிகா தர்மத்துக்கு எதிரானதும், பத்திரிகைச் சுதந்திரத்தை துஸ்பிரயோகம் செய்வதுமாகும்.

ஒரு உயர் கல்வி நிலையத்தின் தலைமை நிர்வாகி ஒரு மொழியியல் சம்பந்தமான நிகழ்வில் கலந்து கொள்வது தவறா? அதுவும் அந்த நிர்வாகியின் சொந்த மொழியை இன்னொரு மொழி பேசுவோர் கற்றுத் தேறினால் அது பெருமைக்குரிய விடயமல்லவா?

அப்படியிருக்க துணை வேந்தர் அந்த நிகழ்வில் கலந்து கொண்டதை இனவாத அடிப்படையில் தமிழரசுப் பத்திரிகை தூற்றியுள்ளதைப் பார்த்தால், "கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை தீவிரமடைந்ததிற்கு ஒரு பிரதான காரணம் மொழிப் பிரச்சினை என்று எல்லோருக்கும் தெரியும். அதில் 1956இல் பதவிக்கு வந்த பண்டாரநாயக்க அரசு கொண்டு வந்த "சிங்களம் மட்டும்" சட்டமும் ஒன்று.

அதுமாத்திரமில்லாமல், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் நியமிக்கப் படாமையும், ஆயுதப்படைகளில் போதியளவு தமிழ் பேசும் மக்கள் இணைக்கப்படாததும் ஒரு காரணம் என தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த காலத்தில் குற்றஞ்சாட்டி வந்துள்ளன.

ஆனால் அரசாங்கம் மொழி விவகாரங்களுக்கு என தனியான அமைச்சு ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் சிங்கள அரச ஊழியர்களுக்கும், சிங்கள ஆயுதப்படையினருக்கும் தமிழ் மொழியில் தேர்ச்சி




அளிக்கும் போது அதை எதிர்க்கிறார்கள்.

ஆயுதப்படைகளில் தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் இணைக்கும் போது அதையும் எதிர்க்கிறார்கள். அப்படியானால் இவர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள்? என்ன வேணும் இவர்களுக்கு?

இதனால்தான் "தமிழன் என்றோர் இனம் உண்டு, தனியே அவர்க்கோர் குணம் உண்டு" என தமிழனிலேயே யாரோ ஒருவன் சொல்லிச் சென்றானோ என்னவோ?

தமிழரசுக் கட்சிப் பத்திரிகையின் செயல்பாடுகளைப் பார்க்கும் சிலர், அதை "தமிழ் மக்களின் சாபக்கேடு" என்று வர்ணிக்கிறார்கள். அது சரி போலத் தான் தெரிகிறது.

ஏனெனில் எப்போ பார்த்தாலும் அது வெளியிடும் செய்திகள் இனங்களுக்கு மத்தியில் குரோதத்தைத் தூண்டுவனவாகவும், தமக்கு வேண்டாத அரசியல் கட்சிகள், தனிநபர்கள் மீது சேறு பூசுவதாகவும், சமூகத்தில் குரோதத்தை வளர்ப்பதாகவும் தான் இருக்கின்றது.

அதுவும் அந்தப் பத்திரிகையின் பலத்தால் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரின் பத்திரிகை இவ்வாறு செயற்படுவதை உலகில் வேறெங்கும் காண முடியாது எனச் சொல்லலாம்.


வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் இந்தப் பத்திரிகை செய்வது போல ஒரு ஊடகம் செயற்பட்டால், அது பாரதூரமான குற்றமாகக் கணித்து நடவடிக்கை எடுக்கப்படும். கனடா போன்ற ஜனநாயகத்தைப் பேணும் நாடுகளில் ஊடகமொன்று எந்த வடிவிலாயினும் இன, மத, நிற வேற்றுமைகளைத் தூண்டுவதோ, தனிநபர்களை அவதூறு செய்வதோ, வெறுப்புகளைத் தூண்டுவதோ பாரதூரமான குற்றம்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் பத்திரிகை எவ்வித குற்றவுணர்வோ, கூச்சநாச்சமோ, சமூகப் பொறுப்புணர்வோ இன்றி அவ்வாறு செயல்படுகிறது. இலங்கையில் உள்ள பலவீனமான சட்டங்களும், ஊடக சுதந்திரமும் தான் அவ்வாறு செயற்படுவதற்கான துணிவைக் கொடுத்திருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**- வானவில் இதழ் 44**

---





# அன்ட்ரோய்ட் போனை உங்கள் வசப்படுத்த...

இன்றைக்குப் பயன்படுத்தப்படும் பெரும்பாலான மொபைல் போன்களில் அன்ட்ரோய்ட் ஒப்பரேட்டிங் சிஸ்டமே இயக்கப்படுகிறது. இணைய இணைப்பினை எளிதாக்கும் ஸ்மார்ட் போனை நாடுபவர்கள் தேர்ந்தெடுப்பது, அன்ட்ரோய்ட் சிஸ்டத்துடன் வரும் மொபைல் போன்களையே என்பது இன்றைய நடைமுறை ஆகிவிட்டது. இதன் வசதிகளை எப்படி முழுமையாகப் பயன்படுத்தலாம் என்பதற்கு இங்கு சில குறிப்புகளைக் காண்போம்.

### போனுடன் வந்த சொப்ட்வேர்

மொபைல் போனைத் தயாரித்து, வடிவமைத்து வழங்கும் நிறுவனங்கள், தங்களுடைய சொப்ட்வேர் தொகுப்புகள் சிலவற்றையும், வர்த்தக ரீதியில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மற்ற நிறுவனங்களின் சொப்ட்வேர் தொகுப்புகளையும் பதிந்தே தருகின்றன. இவற்றை bloatware packing அல்லது preinstalled apps என அழைக்கிறார்கள். இவற்றில் பெரும்பாலானவை நம் போன் பயன்பாட்டிற்குத் தேவைப் படாதவையே. மொபைல் போன் இயக்கம் வேகமாகவும், எளிதாகவும் இருக்க வேண்டும் என்றால், இவற்றை முதலில் போனிலிருந்து நீக்க வேண்டும். இதற்கு முதலில் போனில் settings பிரிவு செல்லவும். இங்கு உள்ள Apps என்ற பிரிவிற்கு அடுத்து செல்லவும். தொடர்ந்து வலது புறமாக ஸ்வைப் செய்து சென்று, அந்த வரிசையில் "All" என்பதனைக் காணவும். இங்கு நமக்குத் தேவையில்லாத அப்ளிகேஷன்களைத் தேர்ந்தெடுக்கவும். தேர்ந்தெடுத்து Uninstall அல்லது Disable என்ற பொத்தானை அழுத்த, இவை காணாமல் போகும்.

குரோம் பிரவுசரின் திறன் கூட்டுக

மொபைல் போன் பிரவுசர் வழி இணையத்தில் உலா வருகையில், குறைவான அலைக்கற்றையினைப் பயன்படுத்துவது வேகத்தினைத் தரும். மேலும், உங்களுக்கென கொடுக்கப்பட்டுள்ள மாத அளவிலான டேட்டாவினைக் குறைக்கும். இதனை செற் செய்திட, உங்கள் குரோம் அப்ளிகேஷனைத் திறக்கவும். Menu ஐகொன் மீது தட்டி, திரையின் வலது மேலாகச் செல்லவும். சற்றுப் பழைய மொடல் போனாக இருந்தால், போனில் இருக்கும் மெனு (Menu) மற்றும் செற்றிங்ஸ் (Settings) பொத்தானை அழுத்தி இதனைப் பெறவும். இங்கு "Bandwidth management" என்ற ஒப்ஷன் கிடைக்கும். அதனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு "Reduce data usage" என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு இந்த செயல்பாட்டினை இயக்கத் தரப்பட்டிருக்கும் ஸ்விட்சை ஓரமாகத் தள்ளி இயக்க நிலையில் அமைக்கவும். இதனைத் தொடர்ந்து குரோம் பிரவுசர், நம் போனுக்கு வரும் டேட்டாவின் அளவைக் கட்டுப்பாடான நிலையிலேயே வைத்திருக்கும்.

### ஹோம் ஸ்கிரீன் கட்டுப்பாடு

நம் மொபைல் போனின் வாசல் நமக்குத் தரப்படும் ஹோம் ஸ்கிரீன். இங்கிருந்துதான் எதனையும் தொடங்குகிறோம். எனவே, இதனை எப்போதும் நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இதற்கென சரியான முறையில் அன்ட்ரோய்ட் சிஸ்டத்தை இயக்கும் நிலைக்குக் கொண்டு வரும் Custom Android launcher -ஐ இதற்குப் பயன்படுத்தலாம். இதனை இயக்கிப் பயன்படுத்துகையில், முற்றிலும் மாறுபட்டதாகவும், அதே நேரத்தில் நமக்கு எளிதான ஓர் இயக்க சூழ்நிலையைத் தருவதாகவும் இருக்கும். இதற்கென பல அன்ட்ரோய்ட் லோஞ்சர்கள் இணையத்தில் கிடைக்கின்றன. இவற்றில் நான் விரும்புவது Nova Launcher என்ற ஒன்றாகும். இதற்கு அடுத்தபடியாக, EverythingMe மற்றும் Terrain Home என்ற அப்ளிகேஷன்களும் கிடைக்கின்றன. இவை புதிய ஹோம் ஸ்கிரீனை நமக்குத் தந்தாலும், நாம் எளிதில் அதனை ட்யூன் செய்து அமைத்திடும் வகையில் இவை அமைகின்றன. இதனால், நாம் மொபைல் போன் அப்ளிகேஷன்களைப் பயன்படுத்துவது எளிதாகிறது.

### தானாக ஒளி கட்டுப்படுத்தும் நிலை

ஸ்மார்ட் போனைப்பொறுத்தவரை, பெரும்பாலான மேம்படுத்துதல் அதன் ஸ்கிரீன் ஒளியைக் கட்டுப்படுத்துவதிலேயே உள்ளது. இது சிஸ்டத்திலேயே தரப்பட்டுள்ள வசதி என்றாலும், மேலும் இதில் சில நகாசு வேலைகளை மேற்கொள்ளலாம். டுர என்னும் அப்ளிகேஷன் இதற்கான வழிகளை நன்கு தருகிறது. திரையின் ஒளி விடும் தன்மையைச் சரியான அளவிலும், தேவைப்படும் நிலையிலும் மட்டும் தருகிறது. இதனால், நம் கண்களுக்குச் சிரமம் ஏற்படுவதில்லை. பற்றரியின் மின் சக்தியும் பாதுகாக்கப் படுகிறது. பொதுவாக திரைக் காட்சியின் ஒளி வெளிப்பாடுதான், பற்றரியின் அதிக சக்தியினை எடுத்துக் கொள்வதால், இந்த கட்டுப்பாடு நமக்குத் தேவையான ஒன்றாகும்.


### கீ போர்ட் மேம்படுத்தல்

பெரும்பாலான அன்ட்ரோய்ட் போன்களில், நல்ல வேர்ச்சுவல் கீ போர்ட் தரப்படுகிறது. இருந்தாலும், பல வேளைகளில், இந்த கீ போர்ட் இப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்றுதான் நாம் ஆசைப்படுகிறோம். இதற்கெனவே, பல தேர்ட் பார்ட்டி அப்ளிகேஷன்கள் இயங்குகின்றன. Google Play Storeஇல்.

# உணவு வகைகளை சரியான முறையில் நாம் தெரிவு செய்வது எவ்வாறு?

தாரணி முரளீஹரன்,
(Mphil - Reading (Food & Nutrition))
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ் போதனா வைத்தியசாலை.

1




இலங்கையில் பல வகையான பழங்கள், மரக்கறி வகைகள்,, தானியங்கள் மற்றும் வெவ்வேறு உணவு வகைகள் வருடம் முழுவதும் கிடைக்கக் கூடியதாக இருப்பினும், நாம் உயர்ந்தளவு ஆரோக்கியம் சார் சுட்டிகளை அடைந்திருப்பினும், இலங்கையர்களின் போசாக்கு மட்டமோ அன்றி போசாக்கு சார் சுட்டிகளோ ஏனைய நாட்டவர்களுடன் ஒப்பிடுகையில் எந்த வகையிலும் திருப்தி அளிக்கக் கூடிய் வகையிலோ அல்லது மகிழ்ச்சி அடையக் கூடியதாகவோ இல்லை.


எங்களுடைய நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் 16.6 வீதமானவர்கள் குறைந்த பிறப்பு நிறையுடையவர்களாக இருப்பதுடன், கர்ப்ப காலத்தின்போது தாயின் மந்த போசணை குறையூட்டமே இதற்கு பிரதான காரணமாக உள்ளது. மேலும் எமது நாட்டில் சனத்தொகை பரம்பல் மற்றும் சமூக மதிப்பீடு 2006 - 2007 இன்படி 15 வீதமான ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகள் குறுகிய கால குறையூட்டத்திற்கு உட்படுகின்றனர். விற்றமின், கனியுப்பு குறைபாடு உடையவர்கள் எங்கள் நாட்டில் அதிகமாக உள்ளதுடன், குருதிச்சோகை மற்றும் விற்றமின் "ஏ" குறைபாடு என்பன பிரதான போசணை பிரச்சினைகளாகவும் உள்ளன.

குறையூட்டத்தை தவிர கட்டுப்பாடு இல்லாமல் உணவுகளை உட்கொள்வதனால் உருவாகின்ற மிகையூட்டமும் எங்களுக்கிடையில் அதிகரிக்கின்றது. 15 வயதிலிருந்து 49 வயது வரையான பெண்களுக்கிடையில் அதிக நிறையும், அதீத உடற்கொழுப்பும் 31 வீதம் வரை உயர்வடைந்துள்ளது. உடற்பயிற்சி, சுறுசுறுப்பாக செயற்பாடுகள் இன்மை மற்றும் எண்ணெய், மா, சீனி போன்றவற்றை அதிகமாக உட்கொள்ளுதல், அதிக நிறை ஏற்படுவதற்கான காரணங்கள் ஆகும். மேலும் அதிக நிறையினால் ஏற்படுகின்ற நீரிழிவு நோய், இதயநோய், உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. போசணை சம்பந்தமான சகல பிரச்சினைகளிலிருந்தும் மீள்வதற்கான ஒரேவழி நாங்கள் எல்லோரும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைப் பற்றி அறிந்து அவற்றை பழக்கப்படுத்தல் ஆகும். நாம் உட்கொள்ளும் உணவுகள் ஆறு உணவுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. எல்லா உணவுப்பிரிவுகளிலும் உள்ள உணவுகளைப் பெற்றுக்கொள்வதுடன் அவற்றை அவசியமான அளவுகளில் தெரிவு செய்யக்கூடிய ஆற்றலானது ஆரோக்கிய உணவுப் பழக்கவழக்கங்கள் எனப்படும். ஆரோக்கியமான உணவுப் பழக்கமானது தனிநபரின் ஆரோக்கியமாக, வினைத்திறன் மிக்க நீண்ட ஆயுட்காலத்திற்கு வழிசெய்யும். ஆரோக்கியமான உணவுப்பழக்க வழக்கங்கள் குறித்து நாளை பார்க்கலாம்.

(தொடரும்)

# இதைத் திருட முடியாது

தென் அமெரிக்க நாடான சிலியில், யாராலும் திருட முடியாத சைக்கிள் ஒன்றை, இங்குள்ள பொறியியல் கல்லூரி மாணவர்கள் மூன்று பேர் கண்டுபிடித்துள்ளனர். இந்த சைக்கிளுக்கு, பிரத்தியேகமாக பூட்டு எதுவும் இல்லை. அதற்கு பதிலாக, சைக்கிளில் உள்ள பிரேம்களே, பூட்டாக பயன்படுகின்றன. சைக்கிள் சீற்றின் அடியில் உள்ள பிரேமை வெகு சுலபமாக கழற்றி, அருகில் உள்ள மரம் அல்லது மின் கம்பத்தில் இணைத்து, பூட்டி விடலாம். திருடர்கள் இந்த பிரேமை உடைத்து, சைக்கிளை எடுத்தாலும் பயன் இல்லை. ஏனெனில், பிரேமை உடைத்தபின், இந்த சைக்கிளை பயன்படுத்த முடியாது; இரும்புக் கடையில் தான் போட முடியும்.



மாறுபட்ட வேர்ச்சுவல் கீ போர்ட் தரும் தேர்ட் பார்ட்டி அப்ளிகேஷன்கள் நிறைய கிடைக்கின்றன. இவற்றில் SwiftKey என்பது சிறப்பான, எளிதான, வசதியான் இயக்கத்தினைத் தருவதாக அமைந்துள்ளது. இதில் முன் கூட்டியே முழுச் சொற்களைத் தரும் next-word prediction வசதியைக் கூட நாம் விரும்பும் வகையில் அமைத்துக் கொள்ளலாம். இதே போன்ற மற்ற சிறந்த அப்ளிகேஷன்களைக் குறிப்பிட வேண்டும் என்றால், Swype மற்றும் TouchPal ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

### அறிவிப்புகளைக் கட்டுப்படுத்த

அன்ட்ரோய்ட் சிஸ்டம் இயங்கும் போன்களில், நோட்டிபிகேஷன் எனப்படும் தகவல் அறிவிக்கைகள் நமக்கு சில நன்மை தரும் தகவல்களை அளிப்பவை ஆகும். ஆனால், அவையே எண்ணிக்கை அதிகமாகும்போது, தேவையற்ற குப்பைகள் சேரும் இடமாகத்தான் போன் திரை காட்சி அளிக்கும். இப்படிப்பட்டவற்றைக் கட்டுப்படுத்த அன்ட்ரோய்ட் சிஸ்டம் சில கட்டுப்பாட்டு வசதிகளையும் அளிக்கிறது. நோட்டிபிகேஷன்களைத் தரும் அப்ளிகேஷனில் இவற்றைக் கட்டுப்படுத்தும் வசதி அளிக்கப்படவில்லை என்றால், சிஸ்டம் செற்றிங்ஸ் ஐகொன் அழுத்தி, Apps என்ற பிரிவிற்குச் செல்லவும். குறிப்பிட்ட அப்ளிகேஷன் பெயரைக் கண்டறியவும். அதில் "Show notifications" என்பதன் அருகேயுள்ள செக் பொக்ஸில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும். இனி, அந்த அப்ளிகேஷன் சார்ந்த அறிவிப்புகள் போனுக்கு வராது.

### முக்கிய மின் அஞ்சல் தகவல் கவனத்திற்கு வர

உங்கள் மொபைல் போனில் உள்ள ஜிமெயில் அப்ளிகேஷனில் செட்டிங்ஸ் பிரிவு செல்லவும். அதில் உங்கள் அக்கவுண்ட் தேர்ந்தெடுக்கவும். அங்கு "Manage labels" என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அதில் நீங்கள் உருவாக்கிய லேபிள் மீது ரப் செய்திடவும். தொடர்ந்து "Sync messages" என்பதனைத் தேர்ந்தெடுத்து, "Sync: Last 30 days" என்பதற்கு மாற்றவும். இறுதியாக, "Label notifications" என்ற பிரிவிற்குச் சென்று, Sound என்னும் ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். முக்கியமான அஞ்சல் கிடைக்கும் போது, எழுப்பப்பட வேண்டிய ஒலியினைத் தேர்ந்தெடுத்து அமைக்கவும். இப்படியே, நீங்கள் அமைக்கும் ஒவ் வொரு லேபிளுக்கும் அமைக்கலாம்.

# பெடியள் கனடாவிலை... மாவையண்ணை போராட்டத்திலை?!!



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

"வாலையிலை ஆடின தேவடியாள் வயது செல்லச் செல்லக் காலைக் காலை ஆட்டுவாளாம்" எண்டொரு பழமொழி ஊரிலை உலவுறது. இப்ப மாவையண்ணையின்ரை பில்டப்பைப் பார்த்ததும் அது பட்டெண்டு ஞாபகத்துக்கு வந்துது.

தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தி, பொலிஸ் அடிக்க, அதை வாங்கிக் கொண்டு ஈழநாட்டிலையும், சுதந்திரனிலையும் படமும் பேட்டியுமாய்க் கொஞ்சக் காலம் போச்சுது. அடிச்ச பொலிசின்ரை பெற்றன் பொல்லு உடைஞ்சதெண்டு சொல்லி நாகநாதனுக்கு இரும்பு மனிதன் பட்டமும் குடுத்துப் புளகாங்கிதப்பட்டுது.

கடைசியிலை தமிழர்களைக் கடவுள்தான் காக்க வேணும் என்ற சுடலை ஞான போதனையை உதிர்த்து விட்டு செல்வநாயகம் போய்ச் சேர்ந்தார்.

தந்தையின்ரை தளபதி அமிர்தலிங்கத்தின்ரை காங்கேசன்துறைத் தொகுதியிலை இருந்து புறப்பட்ட மாவையண்ணை, தந்தை செல்வா போன்றோரின் பொருத்தமற்ற கருத்துக்கு எதிராக தீவிரத் தன்மையோடை எழுந்த முதல் இளைஞர் இயக்கமான "ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தை" திருகோணமலை இலங்கை மன்னனோடை சேர்ந்து உருவாக்கனவர்.

அது கொஞ்சம் வளரத் தொடங்க, தமிழரசுக் கட்சிக்கு ஆப்பு வைக்கும் எண்டதாலை அதை உடைக்க மாவையையே தமிழரசுக் கட்சி கருவியாய்ப் பாவிச்சது.

சரி, அதை உடைச்சாச்செண்டால் அடுத்ததாய் தமிழ் இளைஞர் பேரவை உருவாகிச்சுது. அதிலையும் மாவை இணைஞ்சு கொண்டார். ஆனால் அதையும் உடைக்க வேண்டுமே. மீண்டும் மாவையே கருவியானார்.

இதை உடைச்சால் என்ன பரிசு எண்டு மாவையாக்கள் பேரம் பேசிச்சினை. தமிழரசுக் கட்சியிலை இவ்வளவு காலமும் தொடங்காமல் இருந்த, தொடங்கினால் தலைமைக்கு ஆபத்து வந்து விடும் எனப் பயந்திருந்த இளைஞர் அணியை ஆரம்பிக்கிறதெண்டும், அதிலை பதவி குடுக்கிறதெண்டும் வாக்குக் குடுத்தினை.

எனவே, அடுத்த இயக்கத்தையும் உடைச்சு, தமிழரசுக் கட்சியின்ரை இளைஞர் அணியை உருவாக்கிச்சினை. அதுக்காக சில வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி, நாலைஞ்சு தடவை சிறைக்கும் சென்று வந்தார் மாவை.

சிறைக்குச் சென்றதை "ஸ்டன்ட்" என்று சொல்லிக் கொச்சைப்படுத்த மாட்டன் பாருங்கோ. அண்டைக்கிருந்த தமிழரசால் உசுப்பேற்றப்பட்ட மனோ நிலையில் இருந்த தீவிர இளைஞர்கள் பலரும் விசுவாசம் மற்றும் நம்பிக்கையோடை போராட வெளிக்கிட்டதும், சிறை சென்றதும் உண்மைதான்.

ஆனால் அதுக்குப் பிறகு வந்த இளையதுகள் "இவையிலை வேலையில்லை" எண்டதை விளங்கி மாணவர் பேரவையை உருவாக்கி, அதுக்குப் பிறகு இந்தியாவின்ரை அனுசரணையிலை பல ஆயுத இயக்கங்கள் உருவாகி, சங்ககாலத்தையெல்லாம் திரும்பிப் பார்த்து இண்டைக்கு கையறுநிலையிலை வந்து நிக்கிறம்.

இந்த இடைக் காலத்திலை இயக்கங்களாலை துரோகிகளாக நோக்கப்பட்ட தமிழரசுக் கட்சிக்காரர் கொழும்பிலையும், தமிழகத்திலையும் அரசுகளின்ரை ஆசீர்வாதத்தோடை வாழ்ந்து, புலியின்ரை துரோகிப் பட்டத்தோடை குண்டு, சூட்டுக்கு இரையாகிப் போனது போக தப்பினவை இப்ப புலியளின்ரை நிழல் போலை காட்டிக் கொண்டு அடுத்தவரைக் கைநீட்டி துரோகி எண்டு சொல்லிக் கொண்டிருக்கினை.

இந்த இடைக் காலத்திலை மாவையண்ணை தன்ரை குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வந்திட்டார். மனிசியும், மகளும் இந்தியாவிலை. மகள் அரசாங்க கோட்டாவிலை மருத்துவப் படிப்பு படிக்கிறாள். பெடியள் கனடாவிலை. ஒரு கவலையில்லை.

ஆனந்தசங்கரி முந்தி ஒருக்காச் சொன்னது போலை "இனியென்ன போகிற வயசு. வருத்தம் வந்து போனாலென்ன, சுட்டுச் செத்தாலென்ன" எண்டு யோசிச்சு மாவையண்ணை வெளிக்கிட்டிட்டார்.

நல்லது மாவையண்ணை. ஒரு விண்ணப்பம். கடந்த கால வரலாறு தெரியாத இந்த அப்பாவிப் பெடி பெட்டையளை இதுகளுக்கை இழுத்து அதுகளின்ரை வாழ்க்கையை நாசமாக்கிப் போடாதேயுங்கோ.

வேணுமெண்டால் கனடாவிலை இருக்கிற பெடியளையும், இந்தியாவிலை டாக்டருக்குப் படிக்கிற மகளையும் (குளுக்கோஸ் ஏத்தவும் உதவுவாள்) கூட்டி வாங்கோ. கையோடை தமிழீழமே தெரியாமல் இந்தியாவிலை இருக்கிற ஐங்கரநேசன் குடும்பத்தையும், கனடா வாசிகளான சுரேஸ் குடும்பத்தையும், சுவிஸிலை இருக்கிற செல்வம் அடைக்கலநாதன் குடும்பத்தையும் கூட்டி வாங்கோ. கொழும்பு, சுவிஸ் எண்டு பிஸ்னஸிலை பிஸியாய் அலையிற சரவணையின்ரை மகள் லக்சுமியைக் கூப்பிடாதேங்கோ. அது யு.என்.பிக்கு சாதகமாய்ப் போயிடும்.

"சும்மா பேச்சுக்குச் சொன்னேன். அதையே ஊடகங்கள் ஊதிப் பெருப்பிச்சிட்டுது" எண்டு சொல்லி நழுவவோ, "ஜனநாயகமில்லாத நாட்டிலை அகிம்சைப் போர் சாத்தியமில்லை. எம்மைக் கூண்டோடு அழிக்க இலங்கை அரசு சதித் திட்டம் தீட்டியுள்ளதால் அதிலிருந்து தந்திரோபாயமாகப் பின்வாங்கியுள்ளோம்" என்று அறிக்கை விடவோ தெரியாதா உங்களுக்கு?

50 வருடங்களாக இப்பிடித்தானே உங்கடை காலநதி உருளுகிறது.

# பல்பரிமாண வளர்ச்சி பெற்று பலமான வெளியீடுகளுடன் மிளிரும் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



அதிபர்
திரு.சண்முகநாதன் வேலழகன்



பிரதி அதிபர்
திருமதி. இராஜினிதேவி சிவலிங்கம்

## பாடசாலைகளில் அதிசிறந்த முன்னோடி செயற்பாடுகள்

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி செயற் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட 1AB வகை பாடசாலையாகும்.

யாழ். மாவட்டத்தில் யாழ். - பருத்தித்துறை வீதியில் ஆறு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இப்பாடசாலை 1852ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கோப்பாய் கல்வி வலயத்தின் கீழ் அமைந்துள்ள இப்பாடசாலை ஓர் கலவன் பாடசாலையாகும் ஆறு ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மாடிக்கட்டடங்கள் மற்றும் விளையாட்டுமைதானம் என பலவசதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை வகுப்புக்களையுடைய இப்பாடசாலையின் உயர்தரப்பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் என சகல பிரிவுகளையும் கொண்டுள்ளதாக விளங்குகிறது. அத்துடன் 160 வருடங்களைக் கடந்து பிரபல பாடசாலையாக இது விளங்குவதற்கு இப்பாடசாலையில் பணியாற்றிய பணியாற்றிக்கொண்டிருக்கும் அதிபர்கள் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் சமூக ஆதரவும் காரணமாகும்.

கல்வித்துறையின் கடந்தகால உழைப்புக்களின் விளைவாக இக்கல்லூரி பல துறைசார் விற்பன்னர்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உயர் பதவிகளிலும், அரசியலிலும், வெளிநாடுகளிலும், உள்ள இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் புகழை பறைசாற்றி வருகின்றனர். பழையமாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சியின் பால் தம்மை அர்ப்பணித்து வருகின்றமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

கல்வித்துறையில் மட்டும் அல்லாது ஆளுமை விருத்தியை ஏற்படுத்தும் இணைக்கலைத்திட்டத்தின் செற்பாட்டிற்கும் முன்னுரிமை தரப்படுகின்றது. விளையாட்டுத்துறை விருத்திக்கான வசதிகளும் இப்பாடசாலையில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. கூடைப்பந்தாட்ட மைதானம், உதைப்பந்து கரப்பந்து மைதானத்துடன் வசதியான விளையாட்ட மைதானமும் இங்கு அமைந்துள்ள விளையாட்டுத்துறையும் இப்பாடசாலையில் கடந்த காலங்களில் பலசாதனைகளை ஏற்படுத்தியுள்ளன.

மேலும் மாணவர் தொடர்பான சகல மன்ற செயற்பாடுகள் மற்றும் கழகங்களும் சாரணியமும் இப்பாடசாலையில் நடைமுறையில் உள்ளன.

இப்பாடசாலையில் அதிகமாணவர்கள் கல்வி கற்றிருந்தாலும் கடந்தகால அசாதாரண சூழ்நிலைகாரணமாக மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டு அறுநூறு வரையான மாணவர்களைக் கொண்டதாக தற்போது இயங்கி வருகின்றது. இப்போது 52 ஆசிரியர்களும் பணியாளர், நூலக உதவியாளர், காவலாளி என ஆறு கல்விசாரா ஊழியர்களும் சேவையில் உள்ளனர். சகல பாடசத்துறைக்கும் போதுமான பயிறறப்பட்ட மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் இங்கு சேவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜனாதிபதி விருதினை வென்ற பாடசாலைச் சாரணியம்

மேலும் இப்பாடசாலையில் கல்வி பயில வரும் மாணவர்கள் வலி.கிழக்கில் உள்ள பல கிராமங்களில் இருந்து வருவதுடன் ஒருசிலமாணவர் தென்மராட்சி பகுதியில் இருந்து வந்தும் கல்வி பயில்கின்றனர். மாணவர் தொகையின் அரைப்பங்கினர். உயர்பிரிவிலேயே கல்வி கற்பதுடன் வருடந்தோறும் அதிகளவு மாணவர் பல்கலை கழகம், நுண்கலைப் பீடம் மற்றும் கல்வியியற கல்லூரி போன்றவற்றுக்கும் அனுமதி பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் கல்வி விடயத்தில் பெற்றோர்களின் நிலை குறிப் பிடவேண்டிய விடயமாகும் தற்போதைய நகரப் பாடசாலை மோகம் காரணமாக பல மாணவர்கள் நகரப்பாடசாலைகளில் அனுமதி பெற்றுச் செல்ல பொருளாதார ரீதியில் நலிவடைந்த பெற்றோர்களின் பிள்ளைகளே இங்கு தொடர்ந்து கல்வி கற்கின்றனர். எனினும் வசதியான கல்வி அறிவு மிக்க பெற்றோர்களின் பிள்ளைகள் கணிசமான அளவில் கல்வி கற்கின்றனர்.

அத்துடன் கல்வித்துறையை மேம்படுத்தும் வகையில் பலதிட்டங்கள் வகுக்கையில்அதற்கு பூரணமாக ஒத்துழைப்பு வழங்கும் நிலை போதுமானதாக இல்லை மேலதிக கல்வி முயற்சி இன்மை வரவு ஒழுங்கீனம் என்பன இப்பாடசாலை கல்வி நிலையை மேம்படுத்த சவாலாக உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். எனினும் பாடசாலை மேம்பாட்டுக்காக பல்வேறு செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

பல்வேறு சிறந்த செயற்பாடுகள் பாடசாலையில் நிறைவேற்றப்பட்டும் நிறைவேற்றப்படவும் உள்ளன.

முக்கியமாக கல்வி ரீதியாக முன்னேற்றம் காணப்படும் அதேவேளை மாணவர்மனப்பாங்கு விருத்திக்கும் ஆளுமைவிருத்திக்குமான செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கதாக



விளையாட்டுச் சாதனை வீரர்கள்

- இணைபாடவிதான செயற்பாட்டில் தமிழ்சங்கம் அதிஉயர் செயற்பாடு.
- இணைபாடவிதான செயற்பாட்டில் சாரணிய செயற்பாடு
- இணைபாடவிதான செயற்பாட்டில் விளையாட்டுத்துறை அபிவிருத்தி.

போன்றவற்றை சுட்டிக்காட்டலாம்.

வளரும் ஒரு பாடசாலை



2014ஆம் ஆண்டுக்கான கல்விச்சுற்றுலா





மாணவர்களின் பாட, இணைபாடவிதான செயற்பாடுகள்



முன்னாள் அதிபருடன் ஆசிரியர்கள்

# பெரிய கட்டடங்களை அமைப்பதற்கு பிரதேச சபையின் அனுமதி பெறவேண்டும்

## வலி.தென்மேற்கு பிரதேச சபை உபதவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கும் போக்குவரத்துக்கும் ஆபத்தினை ஏற்படுத்தக்கூடிய பிரமாண்டமான கட்டடங்கள் வலி. தென்மேற்கில் அனுமதியின்றி கட்டப்படுகின்றன.

இவ்வாறான அனுமதியற்ற கட்டடங்கள் சட்டத்தின் முன் கொண்டுவரப்படும் எனவும் அனுமதி பெறமால் கட்டடங்களை கட்டியவர்களும் எதிர்காலத்தில் கட்டடங்களை அமைப்போரும் உடன் சபையுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என வலி. தென்மேற்கு பிரதேச சபை உபாதவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் அவசர கோரிக்கை விடுதத்துள்ளார்.

வலி.தென்மேற்கில் கடந்த காலங்களில் சபையில்லாத போது சபையின் அனுமதியுடன் கட்டடங்களுக்கான அனுமதி பெறப்பட்டு உட்கட்டுமானம் இடம் பெற்றன.

தற்போது சபை உள்ள காலங்களில் வலி. தென்மேற்கில் உள்ள முக்கிய பிரதான வீதிகள், ஒழுங்கைகள், முகப்புக்கள் எங்குபார்த்தாலும் அனுமதியற்ற கட்டடங்கள்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் எழுமாற்றாக நேரடியாக சென்று உட்கட்டுமான இடங்களை பரிசோதனை செய்தால் அனுமதி பெறப்படாத நிலை அவதானிக்கப்படுகின்றது.

சில பிரதான வீதிகளிலும், முகப்புக்களிலும் அமைக்கப்படும் அனுமதியற்ற கட்டடங்களால் பெரும் ஆபத்து, வீதி விபத்து இடம்பெறும் அபாய நிலை காணப்படுகிறது.

இதற்கு சட்டத்தின் முன் உள்ள சபையே பொறுப்பு சொல்லவேண்டி ஏற்படும்.

எனவே அனுமதியற்ற அனைத்து கட்டடங்களையும் உடன் நிறுத்தி முறைப்படி உப அலுவலகங்களுக்கு சென்று விண்ணப்பப்படிவங்களைப்பெற்று அனுமதி பெற்று கட்டடங்களை அமைக்குமாறு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உப தவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் கேட்டுள்ளார்.

இதேவேளை அடுத்தவாரம் முதல் வருமான பரிசோதகர் மூலம்அனுமதியற்ற கட்டடங்களின் விபரம் எடுக்கப்பட ஏற்பாடு செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (92)

## பயிற்சிப்பட்டறை

(வடமராட்சி)

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் நிதியுதவியுடன் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவையினால் கவிதை, சிறுகதை, விசேட கூத்து என்பவற்றுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் ஆர்.ரீ.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (01)

## கூட்டம்

(கரணவாய்)

கரணவாய் கிராம அலுவலர் பிரிவில் கரணவாய் கிராம அபிவிருத்திச் சங்கம் உருவாக்குவதற்கான முதலாவது கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிராமசேவகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கரணவாய் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தியில் அக்கறை உடைய சகலரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

## பாடசாலை வளாகத்தில் பழுதடைந்த வாகன உதிரிகள்


### பாம்புகள் குடியிருப்பதாக அச்சம்

ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் முள்ளி வாய்க்காலில் கைவிடப்பட்ட ஒரு தொகுதி பழுதடைந்த வாகனங்களின் உதிரிப்பாகங்கள் அகற்றப்பட்ட நிலையில் காணப்படுவதால் இவ் இயந்திர உதிரிபாகங்களுக்குள் பாம்புகள் இருப்பதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்படைவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப் பாடசாலை மாணவர்கள் 5ஆம் தரத்துக்கு உட்பட்டவர்களாக உள்ளனர் விளையாட்டுக்களுக்கு ஒரு சில மாணவர்கள் இவ்விடத்தை பயன்படுத்திவருவதனால் உயிர் ஆபத்துக்களை எதிர் நோக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்துக்கு கொண்டு சென்ற போதும் இதனை அகற்றுவதற்கு எந்தவித நடவடிக்கையும் அவர்களால் எடுக்கப்படவில்லை என பாடசாலை மாணவர்களது பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டுவந்து உதிரிப்பாகங்களை அகற்றித் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(40)

## வெள்ளி நற்சிந்தனை...



## பண்பாட்டுக் கருவூலம்

கரடுமுரடான நிலத்தைச் செம்மைப்படுத்தினால் அந்த நிலம் பண்பட்ட நிலம் என அழைக்கப்படுகின்றது. அதைப்போன்று கரடுமுரடான மனதைச் செம்மைப்படுத்தும் போது அது பண்புடமை என்று கூறப்படுகிறது.

பண்பட்ட நிலத்திலிருந்தும் பல உயிர்களுக்குத் தேவையான பயிர் விளைவது போன்று பண்பட்ட மனதிலிருந்து நல்லெண்ணங்கள் தோன்றி நற்செயல்கள் உருவாகின்றன.

"பண்பெனப்படுவது பாடறிந தொழுதல்" என்று கலித்தொகை பண்பாட்டிற்கு இலக்கணம் கூறுகிறது. இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "மக்கட் பண்பு" என்று அதிகாரம் வகுத்தார். "பண்புடைமையாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லா இயல்புகளையும் அறிந்து உத்து ஒழுகுதல்" எனப்பரிமேழலகர் கூறினார்.

சேக்கிழார், பெரியபுராணத்தில் தன் உயர்ந்த பண்பு நலன்களைப் கூறியுள்ளார் பண்புடைய மக்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டினார். இந்நூலைப் படிப் போரும் பண்பாளராக மாறுவர் என்று தன் நூலை உருவாக்கினார். எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய இப் பண்பட்ட கருத்துக்கள், படிப்போரின் உள்ளத்தைப் பண்படுத்துகின்றன, சான்றோராக்குகின்றன

அரத்தைப் போல, கூரிய அறிவு இருந்தாலும் மக்கள் பண்பு இல்லாதவர்கள், மரத்தைப் போன்றவர்கள் என திருவள்ளுவப் பெருமான் குறிப்பிடுகிறார்.

**"அரம் போலும் கூர்மையரேனும்,மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்,"**

பணபுடைமை எனும் அதிகாரத்தில் இடம் பெறும் இக்குறள் ஆழ்ந்த பொருளுடையது "அரம் போலும் கூர்மையர்" என்பது அனைத்துத் துறைகளையும் சார்ந்த விற்பன்னர்களையும் குறிக்கும் என்றாலும் நூல் பல கற்று பாண்டித்தியமடைந்த கல்வியாளர்களைக் கருதினால் அவர்கள் உயர்ந்த அறிவுடையவர்கள் என்பதோடு அமையாமல் ஒரு அரம், மற்றைய அரத்தை தீட்டிக் கூர்மையாக்குவது போல உயர் கல்வி கொண்டவன் அறிவுள்ள பலரையும் உருவாக்குகிறான். என்பது தான் அரம் போலும் கூர்மையர் என்பதன் கருத்து ஆகும். இத்தகைய உயர்வுக்கு உடையவர்கள் கூட மனிதர்களை மதிக்கத் தெரியாதவர்களாக இருப்பான். "மரம் போல்வர்" என வள்ளுவர் குறிப்பிடுவதன் மூலம் பண்பு உடைமை என்பதே மனிதனுக்கு அடையாளம் எனத் தெளிவாக கூறியுள்ளார்.

எனவே மனிதர்களை மதிக்கக் கற்றுக் கொள்வோம்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

ரஜினி அரசியலுக்கு வரவேண்டுமா வேண்டாமா என்று டிவியில் நான் பங்கேற்ற விவாதம். விவாதத்தின் மையப் பொருள் 'ஆண்டவனின் விருப்பம் இருந்தால் அரசியலுக்கு வருவேன்' என ரஜினி எங்கோ யாரிடமோ சொன்னதுதான். 'நாளை காலை தேநீர் குடிப்பீர்களா' என்று ரஜினியிடம் கேட்டாலும் மேற்படி பதிலையே சொல்வார். இதை நாசூக்காக விளக்கினேன்.

மேலும், ரஜினி தனிப்பட்ட முறையில் நல்லெண்ணங்கள் கொண்ட ஒரு மனிதர். ஆனால் வெறும் பொப்புலாரிட்டியை வைத்து அரசியல் பண்ண முடியாது. அதற்கு அடிமட்டத்திலிருந்து ஒரு கட்சிக் கட்டுமானம் தேவை. விஜயகாந்த் அதை திட்டமிட்டு உருவாக்கினார். ரஜினிக்கு அத்தகைய அரசியல் விருப்புறுதி எதுவும் இருந்ததில்லை. அவர் சில பொதுப் பிரச்சினைககளில் எப்போதாவது உணர்ச்சிவசப்பட்டு எதிர்வினையாற்றுவார் அவ்வளவுதான்.

மேலும் எல்லா கட்சியிலும் ரஜினியை நேசிப்பவர்கள் இருக்கிறார்கள். அவர் அதையெல்லாம் கெடுத்துக்கொள்ள விரும்ப மாட்டார். ரஜினியின் புகழை அதிகாரமாக மாற்ற விரும்பும் அவரது ரசிகர் மன்றத்தினர், அவரது செல்வாக்கை கொஞ்சம் தாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாதா என ஏங்கும் அரசியல் கட்சிகள், இந்தச் சூழலை பயன்படுத்தி வியபாரம் செய்யும் ஊடகங்கள் இவர்கள்தான் ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் என்ற நெருக்கடியைக் கொடுக்கிறார்களே தவிர அவருக்கு அதில் எந்த ஆர்வமும் இல்லை.

பா.ம.க பாலுவுக்கு ரஜினிமீது என்ன கோபமோ தெரியவில்லை. 'ஒரு நடிகரை நாடாள விடமாட்டோம். தமிழர்களை ஒரு தமிழன்தான் ஆளவேண்டும்' என்று ஆவேசமாக பேசினார். நான் அதற்கு 'ஒரு நடிகர் அரசியலுக்கு வரக் கூடாது என்றால் ஒரு சாதித் தலைவர் அரசியலுக்கு வரக் கூடாது. ஒரு சாராய வியபாரி அரசியலுக்கு வரக் கூடாது. ஒரு கார்பரேட் முதலாளி அரசியலுக்கு வரக் கூடாது என்று நான் சொல்வேன். மேலும் ரஜினியின் அடையாளம் என்பது தமிழ் அடையாளம். அவர் தன் வாழ்வையும் கலையையும் தமிழ்நாடு சார்ந்துதான் உருவாக்கிக் கொண்டார். எனவே அவரை அன்னியராக பார்ப்பது அபத்தமானது. ஒருவரின் தாய்மொழி தமிழாக இருந்தால்தான் அவர் தமிழ்நாட்டில் அரசியல் செய்ய முடியும் என்றால் வீட்டில் தெலுங்கு பேசும் வைகோ, விஜயகாந்தை எல்லாம் என்ன செய்வது? தமிழன்தான் தமிழ்நாட்டை ஆளவேண்டும் என்பதெல்லாம் இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிரான பேச்சு' என்றேன்.

டிவி நிலையத்தை விட்டு வெளியே வந்ததும் பயங்கரமாக பசித்தது. ஒரு டீக் கடையில் ஆறிப்போன இரண்டு சமோசாக்களை வாங்கி ஆவேசமாக சாப்பிட்டேன்.

இப்படியே போனா என்னையும் இந்த நாட்டையும் ஆண்டவனால்கூட காப்பாத்த முடியாது. **– மனுஷ்ய புத்திரன்**

கமல் நடித்த படங்களில் 'மைக்கல் மதன காம ராஜன்' படத்தின் திரைக்கதையே மிக நேர்த்தியாக சுவாரஷ்யத்துடன் வடிவமைக்கப்பட்டது.

பின்னால் வரப்போகிற பிரச்சினைக்கான லீட், ஒரு காட்சிக்கும் அடுத்த காட்சிக்குமான லிங்க்

அதில் புதிய கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துகிற முறை, குறிப்பாக நான்கு கமல்களையும் தனித்தனியாக அறிமுகப்படுத்தும்போதே அவர்களின் குணாம்சங்களை தொழிலை சொல்லுகிற புத்திசாலித்தனம் என்று நிறைய வித்தைகள் இருக்கிறது 'மைக்கல் மதன காம ராஜன்' திரைக்கதையில்.

காந்தியின் கொலை வழக்கைச் துணிச்சலாக சொல்ல முயற்சித்த இந்தியாவின் சிறந்த படங்களில் ஒன்றான அவரின் 'ஹே ராம்' படத்திற்கும் அதுபோலவே திரைக்கதை அமைந்திருந்தால் மிகப்பெரிய வெற்றியை பெற்று இருக்கும்.

'மைக்கல் மதன காம ராஜன்' திரைப்படத்தில் நான்கு கமல்–கள் இருந்தும் பார்வையாளர்களுக்கு குழப்பம் ஏற்படாதவாறு, நான்கு பேரையும் சிறப்பாக வழிநடத்தியது தெளிவான திரைக்கதை.

'ஹே ராம்' – ஒரே கமல் இருந்தும் தெளிவற்ற அல்லது தயக்கமான திரைக்கதை ஒட்டுமொத்தப் படத்தையும் வீழ்த்தியது.

'மைக்கல் மதன காம ராஜன்' படத்தில் – தலித் கிறிஸ்தவ அடையாளம் கொண்டவரால் வ்ளர்க்கப்படும் 'மைக்கல்' என்கிற பாத்திரம் கிரிமினலாகவும்; பார்ப்பனரால் வளர்க்கப்படும 'காமேஷ்வரன்' என்கிற பாத்திரம் அப்பாவியாகவும் காட்டியிருக்கிற அரசியலை புரிந்துகொள்ளாமல் ஒதுக்கி விட்டுப் பார்த்தால், 'மைக்கல் மதன காம ராஜன்' மிகச் சிறந்த பொழுதுபோக்குப் படம். **– வே.மதிமாறன்**

# எதிர்கால வறட்சியை எதிர்கொள்ள புதிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கம்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு –

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கடுமையான வறட்சியை நிவர்த்தி செய்யும் வகையில் நாடளாவிய ரீதியில் 33 நீர்த்தேக்கங்களை புதிதாக உருவாக்க திட்டமிட்டுள்ளதாக அனர்த்தமுகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்கும் திட்டத்திற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் தொடர்பாக ஏனைய அமைச்சர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு வருகின்றன.

14 புதிய நீர்த்தேக்க திட்டங்களுக்கு அனர்த்தமுகாமைத்துவ அமைச்சு ஏற்கனவே நிதியை ஒதுக்கியுள்ளது. வறட்சியை ஒரு போதும் எம்மால் தடுத்து நிறுத்த முடியாது. மாறாக அதனை குறைப்பதற்கு எம்மால் முடியும்.

இதன்படி வறட்சியை குறைப்பதற்கு புதிதாக அமைக்கப்படும் ஆறுகள்,குளங்களில் நீர்த்தேக்க அளவை அதிகரிக்க முடியும்.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியை அடுத்து நாட்டிலுள்ள 14 மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவென அரசாங்கம் 2000 மில்லியனை வழங்கியுள்ளது. இதனையடுத்து குடும்பங்களுக்கு 6000 ரூபா பெறுமதியான பொருட்கள் ச.தொ.ச.விலிருந்து பெறப்பட்டு கடந்த 12 நாட்களாக வழங்கப்பட்டன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இதேவேளை கடந்த ஒன்பது மாதகால கடுமையான வறட்சி காரணமாக வடக்கு,வடமத்தி மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# புனர்வாழ்வு ஆஸ்பத்திரிகள் மாவட்டம் தோறும் ஸ்தாபிதம்

(கொழும்பு)

ஒரு மாவட்டத்துக்கு ஒரு புனர்வாழ்வு ஆஸ்பத்திரி என்ற அடிப்படையில் நாடு முழுவதிலும் புனர்வாழ்வு ஆஸ்பத்திரிகளை நிர்மாணிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

திடீர் விபத்துக்களால் பாதிக்கப்படுவோரை சமூகத் துக்கு ஏற்றவர்களாக மாற்றுவ தற்காக இந்த ஆஸ்பத்திரி அமைக்கப்படுவது 'காலத்தின் தேவையாகி விட்டதென சுகாதார அமைச்சின் இளைஞர், முதியோர், அங்கவீனர்கள் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் லக்ஷ்மி குமாரதிலக்க தெரிவித்தார்.

வயது வந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அங்கவீனமாவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. அவர்களைப் பராமரிப்பதற்காக புனர்வாழ்வு தொகுதிகள் நாடு பூராவும் அமைக்கப்படுவது அவசியம் என்றும் டாக்டர் குமாரதிலக்க தெரிவித்தார்.

வயது வந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் சமூக நிலை மாற்றங்கள் காரணமாகவும் அங்கவீனமாவோரின் எண் ணிக்கை அதிகரித்து உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# விபத்தை மறைத்த பொலிஸ் அதிகாரி மாங்குளத்திற்கு இடமாற்றம்

(இங்கிரிய) .

இங்கிரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதயகுமார, நேற்றுமுன்தினம் முதல் மாங்குளம் பிரதேச பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இங்கிரிய பிரதேசத்தில் கடந்த 10ஆம் திகதி பொலிஸாரின் கெப்ரக வாகனத் துடன் மோட்டார் சைக்கிள மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞர ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொரு இளைஞர் காயமடைந்திருந்தார். •

இந்த விபத்து சம்பவத்தை குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரி மறைத்த காரணத்துக்காகவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும், விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ்சார்ஜண்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகிய இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அஜித் ரோஹண தெரிவித்தார்.

# 6 இலங்கை மீனவர்கள் இந்திய கடலில் கைது

(கொழும்பு)

தமிழக மற்றும் ஆந்திர மாநில எல்லைப்பகுதியிலுள்ள கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 6 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது •

கிருஷ்ணாம்பட்டினம் கடற்பரப்பில் இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினரின் ரோந்து நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள், சென்னை துறைமுக பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை மீனவர்களின் மீன்பிடிப் படகும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த மீனவர்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சென்னை துறைமுக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சிறந்த தொழில் முயற்சியாளரை தெரிவு செய்ய விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டின் சிறந்த தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டிக்கு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மாகாண மட்டத்தில் 17 விருதுகளும், தேசிய மட்டத்தில் 25 விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

வடக்கு, வட மத்திய, மத்திய, ஊவா, தெற்கு, வடமேல், சப்ரகமுவ, மேல் மற்றும் கிழக்கு ஆகிய ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்தந்த பகுதியில் சிறந்த தொழில் முயற்சியாளர்களின் தெரிவு நடைபெறும்.

சிறிய ,மத்திய மற்றும் பாரிய அளவிலான தொழில் முயற்சியாளர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் வெண்கலப்பதக்கங்களும் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.


# வழமைக்குத் திரும்பியது வடக்கிற்கான ரயில்சேவை

யாழ்.தேவி தடம்புரண்டதால் தடைப்பட்டிருந்த வட பகுதிகளுக்கான ரயில் போக்குவரத்து சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த யாழ்.தேவி, மஹவ ரயில் நிலையத்திற்கு அருகில் தடம்புரண்டதால் வட பகுதிகளுக்கான போக்குவரத்து சேவை பாதிக்கப்பட்டது.

எனினும் ரயிலை தண்டவாளத்தில் நிலைநிறுத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் இரவு 10.45 மணிக்கு நிறைவடைந்ததாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது இதனையடுத்து வடபகுதிக்கான ரயில்சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது.

## பரமர் சங்கமம்



'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்' எண்டால் புளையே! அந்தக் காலங்களிலை மாதம் மும்மாரி பொழிந்ததாக பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. நானெண்டா என்ரை வயதிலை ஒருக்காத்தானும் மாதம் மும்மாரி பொழிந்ததைக் கண்டதில்லை.

வருடம் மும்மாரி பொழிந்ததும் கடந்த வருடம் (2013) பொச்சுப் போச்சு! வானம் பாத்த பூமியை நம்பி வாழ்ந்து பெருகிய எங்கட வடபகுதி மக்கள் இண்டைக்குக் குடிநீருக்கே தவண்டை அடிக்குதுகள் எப்புடி விவசாயம், தோட்டம்துரவு, குளிப்பு முழுக்கு, உடைகளைத் தோய்பதெல்லாத்தையும் செய்யிறே!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அம்மணி விரிவுரையாளர் முதலில் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு வடபகுதியில் மக்கள் வாழும் நிலைமையே அற்றுப்போகுதெண்டு எச்சரிக்கை செய்து ஏக்கத்துக்குப் பாத்து விட்டா. பிறகு பேராசிரியர் சிவச்சந்திரன் யாழ்ப்பாணக் கிணற்று நீருடன் மலக்கழிவுகள் கலக்கின்றதாக பயமுறுத்தி வைச்சார்.

இவையெல்லாம் குடிநீரைப் போத்தல்களில் அடைச்சு விக்கிற கம்பனியளுக்கு ஊதுகுழல் ஊதிச்சம்பாதிக்கினமா என்ன? அதுதான் போகுதெண்டு பாத்தா அரசாங்கம் மாவலி கங்கை நீரை இரணைமடுக்குளத்தில் பாச்சி குழாய்களில் நீரை விநியோகிக்கப் போவதாகக் கிளம்பிய கதையை எங்கட யாழ்ப்பாணத்தில இருந்து கிளிநொச்சியில் குடியேறி வாழும் தமிழ்மக்கள் மறிச்சுப்போட்டதாக கைவிட்டாச்சு.

இந்த நிலையிலை கடவுள் அங்கலேக்கை கொஞ்சமாக அருண்டு கொண்டு இருக்கும் நிலத்தடிநீரையும் நிலத்து ஓட்டை துளைச்சு அதனூடாக் வெளியேற்றிய சுன்னாகம் மின் உற்பத்தி நிலையக்கழிவு ஓயில் கலந்து குடிநீரைப்பா விக்க முடியாமல் செய்து விட்டதென்று கேள்விப்பட்டா எப்புடி இருக்கும் ?

அந்த செய்தியை பத்திரிகைகளில் பார்த்ததும் வயிறு பத்தி எரிஞ்சுது, அதனைத் தடுத்து நிறுத்தவும் முடியாது. அந் நிலைமை காங்கேசன்துறை வீதி கிழக்குப்பக்கமாக காங்கேசன் துறை வரையிலும் ஏற்பட இருக்கெண்டும் இடியேறு விழுந்து இருக்கு அதுவும் இல்லாமல் தண்ணீலதான் மலக் கழிவு ஓயில் கழிவுகள் எண்டு இல்லாமல் எங்கடை சிறுசுகளும் ஏன் பெரிசுகளும் விரும்பிச் சாப்புடுற ஐஸ்கிறீமிலும் மலத்தொற்று கண்டறியப்பட்ட செய்தி மேலும் குழப்பியடிக்குது.

நெருப்புக்காய்ச்சலை பரப்பும் கோலி போர்ம் பக்றீரியா அளவுக்கு அதிகமாக ஐஸ்கிறீமில் இருப்பதாக பிராந்திய சுகாத்தார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீரில் கோலி போர்ம் பக்றீரீயா ஒன்று காணப்பட்ட போது அவை தடை செய்யப்பட்டுள்ளன.

ஐஸ்கிறீமில் ஒரு லீற்றரில் கோலிபோர்ம் பக்றீரியா ஆயிரக்கணக்காகக் காணப்படுவதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு பணிப்பாளரின் அறிக்கையில் கூறப்படு கிறது. யாழ்ப்பாணப் பகுதியிலே நெருப்புக்காய்ச்சல் நோய் அதிகமாக ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன் ' எண்டது போலை எங்கடை அதீத நுகர்வுத் தேவைகளே இதுகளையெல்லாம் உற்பத்தி செய்து கொண்டிருக்கு இல்லையே பின்னை...

# தாய்மார் மரணமாவதை தடுக்க குடும்பதிட்டமிடல் விழிப்புணர்வு



இலங்கையில் தாய்மார் மரணமடைவது ஒப்பீட்டளவில் 37 வீதம குறைவடைந்துள்ளதுடன் கர்ப்ப காலத்திலன்றி குழந்தை பிறந்து முதல் 42 நாட்களுக்குள் வருடாந்தம் 134 தாய்மார் உயிரிழப்பதாக கணிப்பீடுகள் காட்டுகின்றன.

இந்த எண்ணிக்கையை பூச்சியமாக்குவ்தற்கு குடும்பத் திட்டமிடல் விழிப்புணர்வை பரந்தள வில் முன்னெடுக்க வேண்டியுள்ளதாக சுகாதார கல்விப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து பெண்கள், ஆண்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆற்ற வேண்டிய வகிபாகம் தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செயலமர்வு "தாய்மையை பாதுகாப்போம்" என்னும் தொனிப் பொருளில் சுகாதார கல்விப் பணியகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இங்கு கூடியிருந்த வைத்திய நிபுணர்கள். ஒரு குழந்தை மற்றும் குடும்பத்திற்கு தாய்மையின் முக்கியத்துவம், தாயின் மரணத்தினால் ஏற்படக்கூடிய இழப்புக்கள், அதற்கான காரணங்கள், அவற்றினை தீர்க்கும் வழி வகைகள் என்பன தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

உலகில் 24 மணித்தியாலங்களுக்குள் 1500 தாய்மார் உயிரிழக்கின்றனர். இவர்கள் கர்ப்பமடைந்ததன் காரணத்தினாலேயே உயிரிழக்க நேரிடுவது கவலைக்குரிய. விடயமாகும்.

வைத்தியர்களின் எச்சரிக்கையையும் மீறி பெண்கள் கருத்தரிக்கும் நிலையிலேயே இவ்வாறான மரணங்கள் இடம் பெறுவதாகவும் வைத்தியர்கள் கூறினர்.

எனவே தாய் மரணத்தை முடிவுக்கு கொண்டு வருவ தாயின் குறிப்பிட்ட வயதிற்கு முன்னரே கர்ப்பம் தரித்தல், வயது கடந்து கர்ப்பம் தரித்தல், குழந்தைகளுக்கிடையிலான இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட குடும்ப திட்டமிடல் முறைகளை மக்கள் மேலும் திறம்பட முன்னெடுக்க வேண்டியது அவசியமெனவும் வைத்தியர்கள் சிபாரிசு செய்தனர்.

இச் செயலமர்வில் குடும்ப சுகாதார பணியகத்தின் சிரேஷ்ட வைத்தியர்களான கப்பில ஜயரட்ன. நில்மினி ஹேமச்சந்திர, இலங்கை மகப்பேற்று மருத்துவ கல்லூரியின் தலைவர் டாக்டர் கப்பில குணவர்த்தன ஆகியோர் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

■ விலங்குகள் தொடர்பான பின்வரும் அட்டவணையை நிரப்புவதற்குப் பொருத்தமான கூட்டுக்குள் ✓ அடையாளமிடுக. இறுதியில் அமைந்துள்ள கூட்டுக்குள் உண்டு அல்லது இல்லை என எழுதுக.

| | பிராணிகள் | தாவர உண்ணி | மாமிச உண்ணி. | அனைத்தும் உண்ணி. | இலங்கையில் உண்டு/ இல்லை. |
|---|---|---|---|---|---|
| 33. | சிங்கம் | | | | |
| 34. | ஒட்டகச் சிவிங்கி | | | | |
| 35. | காட்டுக்கோழி | | | | |
| 36. | அணில் | | | | |
| 37. | முயல் | | | | |
| 38. | கங்காரு | | | | |
| 39. | மாடு | | | | |
| 40. | சிறுத்தை | | | | |
| 41. | காகம் | | | | |
| 42. | தீக்கோழி | | | | |

■ பின்வரும் பந்தியில் உள்ள இடைவெளிகளைத் தரப்பட்ட சொற்கூட்டத்திலிருந்து தெரிவு செய்து நிரப்புவதன் மூலம் ஒழுங்கான ஒரு சம்பவம் புலப்படும். இல 43- 50 வரையிலான இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

இன்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு (43) .............................. எங்கள் அத்தை மத்திய கிழக்கு நாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் (44) .............................. ஓமான் நகரத்திலிருந்து அவர் எமக்கு எழுதிய (45) .............................. ஓமான் நகரத்தைப் பற்றிய எந்தக் தகவலையும் பெறமுடியவில்லை. அத்தை (46) .............................. திரும்பப் போவதாக வந்த கடிதத்தைக் கண்ட நாளிலிருந்து நானும் தங்கையும் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தோம். அன்று அத்தை வாடகை வாகனமொன்றில் (47) ..............................வந்து சேர்ந்த போது நள்ளிரவு பன்னிரண்டு மணியைத் தாண்டி விட்டது. பயணக் (48) .............................. காரணமாக அத்தை முகம் கை அலம்பி அவசரமாக (49) ..............................சென்றாள். (50) ................விடிந்தால் அத்தையிடம் விபரம் கேட்டுக் கொள்ளலாம் என்று நானும் தங்கையும் நித்திரையானோம்.

43. (1) பின் (2) முன் (3) அண்மையில்
44. (1) வந்தார். (2) சேர்ந்தார். (3) சென்றார்.
45. (1) கடிதங்களிலிருந்து (2) தொலைபேசிச் செய்தியிலிருந்து (3) பணத்திலிருந்து
46. (1) வீடு (2) காடு (3) நாடு
47. (1) வீடு (2) நாடு (3) பாதை
48. (1) களிப்பு (2) களைப்பு (3) குழப்பம்
49. (1) வீட்டுக்கு (2) படுக்கைக்கு (3) பயணத்துக்கு
50. (1) இன்று (2) நேற்று (3) நாளை





# தரம் - 4 பயிற்சி வினாப்பத்திரம் - 2014

பகுதி - I


# கல்வி முரசு


1. மணி




இவ்வினாப்பத்திரத்தில் மொத்தம் 50 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

◆ 01 - 03 வரையிலான வினாக்களில் முதல் கட்டத்தில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து வெற்றிடத்துக்கு வரவேண்டிய உருவினை தரப்பட்ட மூன்று உருக்களிலிருந்தும் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.







◆ இல 4 -15 வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்ட சொல்லுடன் எவ்வகையிலும் தொடர்பில்லாத சொல் ஒன்றைத் தரப்பட்டுள்ள நான்கு சொற்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

4) நீர் 1 மின்சாரம் 2 குளியல் 3 விவசாயம் 4 சண்டை
5) விளையாட்டு 1 வெற்றி 2 தோல்வி 3 பொறாமை 4 பொழுது போக்கு
6) வாசிப்பு 1 அறிவு 2 மடமை 3 பொழுதுபோக்கு 4 சிந்தனை
7) நோய் 1 வேதனை 2 மகிழ்ச்சி 3 சிகிச்சை 4 மருந்து
8) பசு 1 இறைச்சி 2 முட்டை 3 பால் 4 வெண்ணெய்
9) மழை 1 காற்று 2 வெள்ளம் 3 சேறு 4 வெப்பம்
10) காது 1 தொலைக்காட்சி 2 தொலைபேசி 3 பத்திரிகை 4 வானொலி
11) பூங்கா 1 சிங்கம் 2 மலர் 3 வண்ணத்திப்பூச்சி 4 காற்று
12) இலங்கை 1 கண்டி 2 திருநெல்வெலி 3 திருகோணமலை 4 கொழும்பு

◆ கீழே காணப்படும் சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

13 ගොවියා ........................ 14). කෑම ........................
15 එකයි ........................ 16) සියයි ........................

✱ இல 17 - 23 வரையிலான வினாக்களுக்குரிய விடைகளைக் கணித்துச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

17. 5 மீற்றர் 20cm நீளமான சீத்தைத் துணியொன்றை 4 சமமான துண்டுகளாக வெட்டும் போது கிடைக்கும் ஒரு துண்டு சீத்தைத் துணியின் நீளம் என்ன?

1) 1 மீற்றர் 4 சென்ரிமீற்றர் 2) 1 மீற்றர் 30 சென்ரிமீற்றர் 3) 1 மீற்றர் 40 சென்ரிமீற்றர்

18. ஒரு கடையில் சில அன்னாசிப்பழங்கள் இருந்தன. அவற்றில் ஒரு அன்னாசிப்பழத்திலிருந்து 10 துண்டுகள் வெட்டினால் 80 துண்டுகள் கிடைக்கும். அதே எண்ணிக்கையான அன்னாசிப்பழங்களிலிருந்து 5 துண்டுகள் வீதம் வெட்டினால் எத்தனை துண்டுகள் கிடைக்கும்.

1) 160 துண்டுகள் 2) 40 துண்டுகள் 3) 100 துண்டுகள்

19. காஞ்சனாவின் வயது இப்போது 10 வருடங்களாகும். இன்னும் 6 வருடங்களில் அவளின் வயது நிரஞ்சலாவின் வயதின் அரைவாசியாகும் எனின் நிரஞ்சலாவின் இப்போதைய வயது என்ன?

1) 16வருடங்கள் 2) 32 வருடங்கள் 3) 26 வருடங்கள்

20. 51 ரூபாவுக்கு 3 அப்பிள்பழங்கள் வாங்கமுடியும் என்றால் 85 ரூபாவுக்கு எத்தனை அப்பிள்பழங்கள் வாங்கலாம்?

1) 5 2) 10 3) 17

21. அக்காவிடம் உள்ள மாலையின் பெறுமதி ரூ. 7500 ஆகும். தம்பிக்கு வாங்கிய உடையின் விலை ரூ. 1500 ஆகும். இவ்விரு பொருட்களையும் வாங்குவதற்கு எத்தனை 500 ரூபாத் தாள்கள் தேவைப்படும்?

1) 9 2) 90 3) 18

22. கூட்டினுள் இருக்கும் முயல்களின் கண்களினதும் பாதங்களினதும் எண்ணிக்கை 42 ஆகும். கூட்டில் எத்தனை முயல்கள் உள்ளன.


1) 21 2) 14 3) 7

23. தீபாவின் உயரம் மேரியின் உயரத்தை விடக் குறைவாயினும் அகீலாவின் உயரத்தை விடக் கூடவாகும். மேரி நிர்மலாவின் உயரத்துக்கு வர இன்னும் 2 சென்றிமீற்றரால் உயரவேண்டும் இவர்களில் அதிக உயரமானவர் யார்?

1) மேரி 2) நிர்மலா 3) அகீலா

✱ 24 - 26 வரையுள்ள வினாக்களில் முதல் இரண்டு படங்களிலும் உள்ள இலக்கங்களுக்கிடையிலான தொடர்பை அவதானித்து மூன்றாவது உருவுக்குள் உள்ள இடைவெளிக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


24




1) 8
2) 10
3) 30




25.




1) 5
2) 10
3) 32

26.




1) 14
2) 9
3) 8

✱ இல 27 - 30 வரையிலான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

27. நிழல் உண்டாவது

1. ஒளியின் காரணமாக 2. வெயில் காரணமாக 3. பொருள் காரணமாக

28. இரவு உண்டாவது

1. சூரியன் மறைவதால் 2. பூமிசூரியனைச் சுற்றுவதால்

3. உயிரினம் எல்லாம் உறங்குவதால்.

29. வனாந்தரம் இருக்க வேண்டிய அவசியம்

1. காட்டு விலங்குகள் வாழ்வதற்காக 2. வளியைச் சுத்தமாக்குவதற்காக

3. இயற்கையைப் பேணுவதற்காக

30. நாளை சூரியன் உதிக்காவிட்டால்

1. .எல்லோரும் தூங்குவார்கள் 2. வழமைபோல விழித்து வேலை செய்வார்கள்

3. இருட்டாக இருக்கும்.

✱ இல 31 - 32 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

31. சிறிய பறவையிலிருந்து பெரிய பறவை என்ற வகையில் சரியாக அமைந்துள்ள ஒழுங்கு யாது?

1. தேன்சிட்டு, தீக்கோழி, மைனா, புறா, அன்னம்

2. தேன்சிட்டு, மைனா, புறா, அன்னம், தீக்கோழி


3. தீக்கோழி, அன்னம், புறா, மைனா, தேன்சிட்டு

32. பெரிய விலங்கிலிருந்து சிறிய விலங்கு என்ற வகையில் சரியாக அமைந்துள்ள ஒழுங்கு

1. கடலாமை, யானை, கரடி, குரங்கு, எலி.

2. யானை, கடலாமை, குரங்கு, கரடி, எலி.

3. கரடி, யானை, கடலாமை, குரங்கு, எலி.




கோண்டாவில் கிராம அலுவலர் பிரிவிலும் நல்லூர் பிரதேச செயலக பிரிவிலும் அண்மையில் வறட்சி நிவாரண விநியோகம் முன்னெடுக்கப்பட் டது. இதில் நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி நல்லூர் அமைப்பாள ருமான அம்பலம் ரவீந்திர தாஸன் பயனாளிகளுக்கான உருளைக்கிழங்கை வழங்கி வைப்பதைக் காணலாம்.

# "மறந்தவையும் மறைந்தவையும்" நூல்

## பண்பாடுகளை பாதுகாக்கும் வழிகாட்டி

### - பேராசிரியர் சண்முகலிங்கன் தெரிவிப்பு -

பேராசிரியர் சிவலிங்கராஜாவின் 'மறந்தவையும், மறைந்தவையும்' கட்டுரை தொகுப்பு யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு விழுமியங்களை மறக்காமல் மறைந்து போகாமல் இருப்பதற்கான புதிய வழிகளைச் காணவேண்டிய தேவையை உணர்த்தி நிற்கிறது என யாழ். பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தரும், சமூகவியல்துறைத் தலைவருமான பேராசிரியர் என்.சண் முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் "யாழ்ப்பாண பண்பாடு' மறந்தவையும், மறைந்தவையும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது வெளியீட்டுரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

''யாழ்ப்பாண பண்பாடு' மறந்தவையும், மறைந்தவையும் நூலின் மூலநூல் அதேபெயரில் இந் நூலாசிரியரால் பேராசிரியர் அ.வித்தியானந்தனின் நினைவுப் பேருரையாக நிகழ்த்தப்பட்ட விடயம் சுருக்கமாக முன்பே வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலின் விரிவான நூலே இப்பொழுது வெளிவருவது

யாழ்.பல்கலைக்கழக முதல் உபவேந்தர் பேராசிரியர் அ.வித்தியானந்தாவின் உருவச் சிலையை மருத்துவபீட வளாகத்தில் நிறுவ இழுபறி நடக்கிறது அவரது சிலை யாழ். பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்டது. அந் நிகழ்வில் இந்த நூலின் மூல நூல் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவாலே வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

ஏற்புரையில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கூறியதாவது:

"இந் நூலில் சொல்லப்பட்ட விடயங்கள் எனக்கே சொந்தமானவை அல்ல கண்டுகேட்டு, அறிந்தவையே இதன் ஆய்வைகள் இளைய சமுதாய பல்கலைக்கழக மாணவர்கள் இன்னமும் கூடுதலாக செய்யும் உசாத்துணை நூலாக பயன்படுத்த இதனைப் படைத்தேன்" எனக் கூறினார்.

# பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எம்.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக ஓய்வுநிலை பேராசிரியர் (கல்வியற்துறை) எம்.சின்னத்தம்பி கலந்து கொள்வதுடன் ஸ்தாபகா நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக் கழக கல்வியறதுறை விரிவுரையாளர் ஏ.நித்தியவர்ணன் நிகழ்த்தவுள்ளார்.

◆ ◆ ◆

கலாசார அலுவலர்கள் திணைக்களத்தால் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை 9மணிக்கு வடக்கு பிரதேச வடமராட்சி செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ஆர்.டி. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை கலாசார மத்திய நிலைய பொறுப்பு அலுவலர் கே.கிரிதரன் நிகழ்த்துவார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாகித்திய ரத்னா தெணியான் கலந்து கொள்ளவுள்ளார்.

பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன

(01)

# "மாணவர்களுக்கு ஊட்டம்" பயிற்சிப்பட்டறை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 17 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஊட்டம் உள்ள இன் சுவை என்ற தொனிப்பொருளிலான பயிற்சிப் பட்டறையும் செய்முறைப் பயிற்சியும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சியினை பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணி மனையும் பிரதேச சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. அதற்கமைய பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் வைத்திய சுகாதார அதிகாரி திருமதி வி.என். ஆனந்தராசா தலைமையில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பயிற்சிப் பட்டறையின் ஏற்பாடுகள் தொடர்பில் பொது சுகாதார அதிகாரிகள் பணிமனையினர் தெரிவிக்கையில்,

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 34 ஆசிரியர்கள் , மாணவர்கள் மற்றும் மாதர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என 50 பேர் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது போசாக்கு மேம்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாகவும் போசனை உணவுகளின் செய்முறை தொடர்பாகவும் இங்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சிகளை விவசாய திணைக்கள அதிகாரி ஒருவரால வழங்கப்படவுள்ள்து.

மேலும் பாடசாலை மாணவர்களிடத்தில் போசாக்கின்மையினைக் குறைக்கும் நோக்கத்தில் போசாக்கு உணவுகள் தயாரிப்பு முறை தொடர்பிலும் செய்முறை விளக்கமும் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

# சி.ஐ.டி என அறிமுகம் செய்து மின்பட்டியல் பரிசோதனை

கொக்குவில் பிரம்படி வீதிப்பகுதியில் நபர் ஒருவர் வீடுகளுக்குச் சென்று மின்சார சபையின் மின்பட்டியலையும் வீட்டு உரிமையாளரின் அடையாள அட்டையையும் வாங்கி பரிசோதனை செய்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் இதில் குறித்த இனந்தெரியாத நபர் தன்னை சி.ஐ.டி என அறிமுகப்படுத்திக்கொண்டு இவ்வாறு இரண்டு மூன்று வீடுகளில் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மின்சார சபையிடம் கேட்ட போது அவ்வாறு தாம் ஒருவரையும் அனுப்பவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# பொதுக்கூட்டம்

நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

# வண்ணை வேங்கடேசர் ஆலய வருடாந்த மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆலய வருடாந்த மஹோற்சவ நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி சப்பறமும், 2ஆம் திகதி குதிரைவாகனமும், 3ஆம் திகதி காலை 9மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 8ஆம் திகதி காலை 8 மணிக்கு மகாலஷ்மி அபிஷேகம், மாலை 3 மணிக்கு சுமங்கலி தீபபூஜை என்பன இடம்பெறவுள்ளது.

மஹோற்சவகாலங்களில் தினமும் காலை 10.15 இற்க்கும் மாலை 6. மணிக்கும் வசந்த மண்டபப்பூஜை இடம்பெற்று வருகிறது.

தொடர்ந்து 3ஆம் திகதி வரை காலை 7.30 மணிக்கு நவராத்திரி, மகாலஷ்மி அபிஷேகம் நடைபெறும்.

உற்சவ தினங்களில் தினமும் விசேடசொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று "ஆலயங்கள் ஏன்" என்னும் விடயம் பற்றி எஸ்.செந்தூர்ச்செல்வன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

அடியார்கள் விசேட அபிஷேகத்துக்குரிய நைவேத்தியங்களை நேரகாலத்துடன் ஆலயத்தில் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் கிளை நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதப்போட்டிகள்

தேசியவாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் நல்லூர் கிளை நூலகம் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

இதன் ஒரு நிகழ்வாக பிரதேச மாணவர்கள் மற்றும் நூலக அங்கத்தவரிடையே பல்வேறு போட்டிகளை நடாத்தவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவர்கள் தமது பெயர் விபரங்களை நல்லூர் கிளை நூலகம் மாநகர சபையில் எதிர் வரும் 04ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளின் விபரம் பின் வருமாறு,

வர்ணம் தீட்டுதல் - முன் பள்ளி மாணவர்கள், கதைகூறல் - முன்பள்ளி மாணவர்கள், சித்திரம் வரைதல் - 3ஆம்,4ஆம்,5ஆம் தரங்கள், சிறுவர் செயற்பாடுகள் - பாட்டு - 3ஆம் 4ஆம் 5ஆம் தரங்கள், பேச்சு (ஆங்கிலம்) - 3ஆம் 4ஆம் 5ஆம் தரங்கள் பேச்சு (தமிழ்) - 3ஆம் 4ஆம் 5ஆம் தரங்கள் , கட்டுரை (தமிழ்) - 6ஆம் 7ஆம் 8ஆம் தரங்கள், 9ஆம் 10ஆம் 11ஆம் தரங்கள் 12ஆம் 13ஆம் தரங்கள், கட்டுரை (ஆங்கிலம்) - 6ஆம் 7ஆம் 8ஆம் தரங்கள், 9ஆம் 10ஆம 11ஆம் தரங்கள், 12ஆம் 13ஆம் தரங்கள், பேச்சு (தமிழ்) 6ஆம் 7ஆம் 8ஆம் தரங்கள் 9ஆம் 10ஆம் 11ஆம் தரங்கள், 12ஆம் 13ஆம் தரங்கள், பேச்சு (ஆங்கிலம்) - 6ஆம் 7ஆம் 8ஆம் தரங்கள், 9ஆம் 10ஆம் 11ஆம் தரங்கள், 12ஆம் 13ஆம் தரங்கள், வினாக்களுக்கு விடையளித்தல் மேலும் போட்டியில் வளர்ந்தோா பங்குபற்ற முடியும் என யாழ். மாநகராட்சி மன்ற நல்லூர் கிளை நூலகர் அறிவித்துள்ளார்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................


பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

# இந்தியர்களால் முடியாதது எதுவும் இல்லை

## மங்கள்யான் வெற்றியில் மோடி பெருமிதம்



செவ்வாய்கிரக சுற்றுப் பாதையில் மங்கள்யான் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதை அடுத்து, இஸ்ரோ விஞ்ஞானிகளை பிரதமர் மோடி உணர்ச்சி பொங்கப் பாராட்டியுள்ளதுடன் 'இந்தியர்களால் முடியாதது எதுவும் கிடையாது' என பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் உள்ள இஸ்ரோ தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் மங்கள்யான் வெற்றி குறித்த செய்திகள் வெளியான சில மணி நேரங்களில் பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கற்பனையிலும் நினைக்க முடியாத விடயத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் கண் முன்னால் செய்து காட்டி இந்தியாவின் திறமையை நிரூபித்துள்ளதுடன் முடியவே முடியாது என்பதையும் முடித்துக்காட்டுவோம் என்பதை நிரூபித்துள்ளோம். அதுமட்டுமன்றி எல்லைகளைக் கடந்து உலகத்துக்கே சவால் விடும் வகையில் சாதனை படைத்துள்ள இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இஸ்ரோ விஞ்ஞானிகளால் நானும், சக இந்தியர்களும் கர்வம் கொள்கிறோம். இனி நமக்கு எல்லையே இல்லை. நமது முன்னோர்கள் கண்ட கனவு நனவாகியுள்ளதுடன் இந்த வெற்றி விண்வெளி ஆராய்ச்சித்துறையில் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் என்றார்.

இந்த பொன்னான தருணத்தில் இஸ்ரோ விஞ்ஞானிகளையும் ஒட்டு மொத்த இந்தியர்களையும் மனதார வாழ்த்துவதோடு முதலில் நமக்கு எதிராக எழுந்த அவநம்பிக்கைகள் காணாமற் போய் உள்ளதாகவும் இதுவரை 51 முறை செவ்வாய்கிரகத்துக்கு விண்கலத்தை ஏவும் முயற்சிகள் நடைபெற்றுள்ளன எனவும் தெரிவித்தார்.

மேலும் மிகக் குறுகிய காலமான 3 ஆண்டுகளில் மங்கள்யான் திட்டத்தை வெற்றிபெறச் செய்து சாதனை படைத்துள்ளோம். ஒரு ஹொலிவுட் படத்துக்கான தயாரிப்புச் செலவைவிட, மிகக் குறைவான செலவில் இந்த வெற்றியை நிகழ்த்தி இருக்கிறோம். இதன் மூலம் நம் நாட்டின் விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்கள் மிகவும் தெளிவானவை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

மங்கள்யான் வெற்றியின் மூலம் முதல் முயற்சியிலே செவ்வாய்க் கிரகத்தின் சுற்று வட்டப் பாதையில் ஆய்வுக்கலத்தை வெற்றிகரமாக இணைத்த ஒரே நாடு இந்தியாதான் என பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளலாம். செவ்வாய்க் கிரகத்தைச் சென்றடைந்த உலகின் நான்காவது நாடாக இந்தியா உயர்ந்துள்ளது. அதுமட்டுமன்றி பூஜ்ஜியத்தை இந்தியர்கள் தான் கண்டுபிடித்தோம். அது உலகுக்கு மிகப்பெரிய கொடையாக விளங்குவதைப் போல மங்கள்யானும் விளங்கும் என பிரதமர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

# ஐ.பட இயக்குநருக்கு ஆர்னோல்ட் பாராட்டு



சென்னையில் சமீபத்தில் நடந்த 'ஐ' படத்தின் வீடியோ வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக ஹாலிவுட் நடிகர் ஆர்னோல்ட் கலந்து கொண்டார். விழாவில் பங்குபெற்று அமெரிக்காவுக்கு சென்றுவிட்ட அவர் இப்படத்தின் தயாரிப்பாளர் ரவிச்சந்திரனுக்கு பாராட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், எனது சென்னை பயணம் மிகவும் இனிமையாக அமைந்தது. அதனால் உங்களுக்கு நன்றி. ஐ படத்தின் ஓடியோ வெளியீட்டு விழாவில் ஒரு அங்கமாக இருந்ததை நினைத்து பெருமைப்படுகிறேன். ஒஸ்கார் விருது வழங்கும் விழா, குளோபல் விருது விழா என எண்ணற்ற விழாக்களில் கலந்து கொண்டுள்ளேன். அதைவிட இந்த விழா எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

நான் சென்னை வந்து இறங்கியதில் இருந்து தங்கும் இடம், சுவையான உணவு எனத் தந்து என்னை நீங்கள் கவனித்துக் கொண்டது என்னை வியக்க வைத்தது. ஐ ஓடியோ வெளியீட்டு விழா சிறப்பாகவும், வித்தியாசமாகவும் நடந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

# டெங்கை ஒழிக்க நுளம்பு கண்டுபிடிப்பு

டெங்கு நோய்க்கு காரணமான பக்ரீரியாக்களை தடுக்கும் புதிய வகை நுளம்பை பிரேசில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நுளம்பைக் கொண்டு டெங்குவை தடுக்கும் சோதனை அவுஸ்ரேலியா, வியட்நாம் மற்றும் இந்தோனேஷியாவிலும் நடத்தப்பட்டுள்ளது. வோல்பாசியா என்ற பக்ரீரியாவை கொண்ட நுளம்பின் உற்பத்தியை பெருக்கி அதன் மூலம் மனிதர்களில் டெங்கு பரவுவதை தடுக்க இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# ஒரே நாளில் 19 நாடுகளுக்கு பயணம்

## மூவர் குழு புதிய உலக சாதனை

(லண்டன்)

ஸ்கண்டினேவிய நாடுகளில் ஒன்றான நோர்வேயைச் சேர்ந்த குன்னார் கர்போர்ஸ் (39), டே யங் பக் (42) மற்றும் ஒய்விண்ட் ஜுப்விக் (38) ஆகிய மூவரும் இணைந்து கடந்த சனிக்கிழமை இரவு ஒரு புதிய உலக சாதனையை நிகழ்த்த புறப்பட்டனர்.

24 மணி நேரத்தில் 17 நாடுகளைக் கடந்த முந்தைய சாதனையை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் கிரீஸ் மற்றும் பல்கேரியாவைப் பிரிக்கும் எல்லைப்பகுதியிலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு புறப்பட்டனர். அங்கிருந்து மாசெடோனியா, கொசாவோ, செர்பியா, குரேஷியா, போஸ்னியா, ஸ்லோவேனியா, ஆஸ்திரியா, ஹங்கேரி, ஸ்லோவாக்கியா, செக் குடியரசு, ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், பிரான்ஸ், சுவிட்சர்லாந்தைக் கடந்து லீச்டென்ஸ்டைனில் கடந்த ஞாயிறன்று இரவு தங்களின் பயணத்தை முடித்தனர்.

கிரீசில் வாடகைக் காரில் ஏற்பட்ட பிரச்சினையுடன் சுவிட்சர்லாந்தில் பயங்கரமான புயல் மழையில் மாட்டிக்கொண்டதைத் தவிர இது ஒரு அற்புதமான பயணமாக முடிந்தது என்று கர்போர்ஸ் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார். இரண்டு நாடுகளை அதிகமாகக் கடந்ததன் மூலம் இந்த மூவர் குழு புதிய உலக சாதனையை படைத்துள்ளது.

# பிரான்ஸ் சுற்றுலா பயணி தலை துண்டித்து கொலை

(பாரீஸ்)

அல்ஜீரியா நாட்டில் சுற்றுப்பயணம் மேற் கொண்ட பிரான்ஸ் நாட்டு சுற்றுலாபயணியை அல்ஜீரிய தீவிரவாத குழுக்கள் கடத்தி, தலையை துண்டித்து கொலை செய்து வீடியோ வெளியிட்டுள்ளனர். இந்த குழுவினர் ஐ.எஸ்.ஐ.எஸ்., பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என கூறப்படுகிறது. உள்நாட்டு பிரச்சினையில் சிக்கி தவித்து வரும் சிரியாவில் பிரான்ஸ் உட்பட மேற்கத்திய நாடுகள் தலையிட்டுள்ளன. இந்நிலையில் அல்ஜீரியாவை சேர்ந்த தீவிரவாதிகள் குழுவினர் சிரியா பிரச்சினைகளில் இருந்து பிரான்ஸ் நாடு விலகிக் கொள்ள வேண்டும் என பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹோலண்டேவுக்கு 24 மணி நேர கெடு வதித்துள்ளனர்.

முன்னதாக அல்ஜீரியாவில் சுற்றுலா சென்றுள்ள பிரான்ஸ் சுற்றுலா பயணி ஹார்வி கோர்டலை பிணை கைதியாக பிடித்து வைத்து கொன்று விடுவதாகவும் மிரட்டல் விடுத்திருந்தனர். இந்நிலையில், சுற்றுலா பயணியை கொலை செய்த வீடியோவை வெளியிட்டுள்ளனர்.

# மோடி விஞ்ஞானிகளை ஆரத் தழுவியது சிலிர்ப்பை ஏற்படுத்தியது



செவ்வாய் கிரகத்தின் சுற்று வட்டப்பாதையில் இந்தியாவின் மங்கள்யான் நிலை நிறுத்தப்படுவதை காண திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் ஸ்பேஸ் சென்டர் இயக்குனர் சந்திரதவான் பெங்களூர் சென்றிருந்தார்.


அங்கு நடந்த வரலாற்று நிகழ்வில் பங்கேற்ற பின்பு நேற்றுமுன்தினம் அவர், திருவனந்தபுரம் திரும்பினார். விமான நிலையத்தில் அவரை விஞ்ஞானிகள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

அதன் பிறகு வீடு திரும்பிய சந்திரதவான் கூறியதாவது.

மங்கள்யான் விண்கலம் செவ்வாயின் சுற்று வட்டப் பாதையில், நிலை நிறுத்தப்பட்டதன் மூலம் உலக அரங்கில் இந்தியாவின் புகழ் வான் அளவுக்கு உயர்ந்துள்ளது.

இந்த சாதனையை காண பிரதமர் மோடி பெங்களூர் வந்தது மறக்க முடியாத நிகழ்வு. அதோடு அவர், இச்சாதனையை படைத்த விஞ்ஞானிகளை ஆரத் தழுவி பாராட்டியது சிலிர்ப்பை ஏற்படுத்தியது. என்னையும் அவர் கட்டிப்பிடித்து பாராட்டியபோது, மெய் சிலிர்த்தது. இவ்வாறு அவர் கூறினார்.

# விண்வெளிக்கு பயணம் செய்யும் கார்



விண்வெளியில் கட்டப்பட்டுவரும் சர்வதேச ஆய்வு கூடத்துக்கான கட்டுமானப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக புதிய வகை தொழில் நுட்பத்துடன் அதி நவீன 'ரோபோடிக் கார்' தயாரிக்கப்பட்டு வருகிறது.

விண்வெளியில் கட்டப்பட்டுவரும் சர்வதேச ஆய்வு கூடத்தை அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து உருவாக்கி வருகின்றன.

இந்த கட்டுமான பணிகளுக்கான பொருட்கள் மற்றும் விண்வெளி வீரர்கள் மற்றும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல ரொக்கெட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கு அதிகளவில் செலவு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது. இந்த நிலையில் விண்வெளி செல்ல புதிய வகை தொழில் நுட்பத்துடன் அதி நவீன 'ரோபோடிக் கார்' தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காரினை ஜப்பானின் மிகப் பெரிய 'ஒபாயாசி' என்ற நிறுவனம் உருவாக்கி வருவதுடன் இந்தக் கார் கார்பன் நானோ தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்படுகிறது. இது உருக்கு உலோகத்தை விட 100 மடங்கு உறுதியானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 'ரோபோடிக் கார்' அதிக சக்தியுடன் இயங்கக் கூடியது. இதன் மூலம் 96 ஆயிரம் கி.மீற்றர் உயரம் விண்வெளியில் பயணம் செய்ய முடியும் என்பதுடன் இதில், விண்வெளிக்கு 7 நாட்களில் ஆட்களும், பொருட்களையும் ஏற்றிச் செல்லலாம் எனத் தெரிவிக்கப்படுவதுடன் இதன் கட்டுமான பணி முடிந்து வருவதாகவும் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தகவலை ஜப்பானின் ஒபாயாஷி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மேலாளர் யோஷி இஷிகவர் தெரிவித்துள்ளார்.

# ஆலயங்களுக்கு தண்ணீர்தாங்கிகள்

# வறட்சிக்கு முகம் கொடுக்க ஏற்பாடு




(யாழ்ப்பாணம்)

தற்சமயம் ஏற்பட்டுள்ள வறட்சியைப்போக்கும்முகமாக ஆலய நிர்வாகத்தினர் மக்களுடன் இணைந்து இந்த வறட்சி நிலையைப்போக்கி உதவவேண்டும் என்ற குறிக்கோளுடன் வடமாகாண ஆளுநரினால் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த இந்து ஆலயங்களுக்கும் கிறிஸ்தவ ஆலயங்களுக்குமான தண்ணீர்த்தாங்கிகள் நேற்று வடமாகாண ஆளுநரின் செயலகத்தில் வைத்து இந்து, கிறிஸ்தவ ஆலய குருமாரிடம் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 25 தண்ணீர் தாங்கிகள் நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு வடமாகாணஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கொழும்பில் பௌத்த அமைப்பினிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொண்ட நிதி உதவியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தண்ணீர்த்தாங்கிகளே இவ்வாறு ஆளுநரால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் செயலர், அதிகாரிகள், பயனாளிகள் கலந்து கொண்டனர். சுமார் பத்து வருடங்கள் பாவனைக் காலமுள்ள தண்ணீர்த் தாங்கிகளே இவ்வாறு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன்படி கீரிமலை நகுலேஸ்வரம் கோவிலுக்கு- 2, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு -2, நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு -3, புங்குடுதீவு பெருங்காடு கந்தசுவாமி கோவிலுக்கு -2, புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவிலுக்கு-2, ஊர்காவற்றுறை சிவன்கோவிலுக்கு -2, ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு முருகன் கோவிலுக்கு -1, இளவாலை சென். தோமஸ் தேவாலயத்திற்கு -2, நெடுநதீவு பிள்ளையார் கோவிலுக்கு -2, நெடுந்தீவு கிழக்கு பிள்ளையார்கோவிலுக்கு -1, பூநகரி பிரதேசசபைபகுதிக்கு -3, கரைச்சிப்பிரதேசசபைப்பகுதிக்கு -3 தண்ணீர்த்தாங்கிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. (பா)

# முல்லையில் கல்வி வளர்ச்சிக்கு புதிய செயற்றிட்டம் ஆரம்பம்

முறிகண்டி புகையிரத நிலைய புனரமைப்பிற்கு சேகரிக்கப்பட்ட நிதியூடாக முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்திப் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முக்கிய அமைப்பான இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர் நிதி வாரத தினூடாக முறிகண்டி புகையிரத நிலையப் புனரமைப்பிற்காக சேக ரிக்கப்பட்ட நிதியூடாகவே இவ் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட, இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி மு/கச்சிலமடு அ.த.க பாடசாலையில் இடம் பெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

## கைத்தொழில்...

பயிற்சியாளர்கள் நியாயமான கட்டணங்களை அறவிடுவார்கள். இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தலைவர் அஞ்சுல ஹேரத் ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும். இலங்கையின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறைகள் முக்கிய பங்கு வகிக்கும் நிலையில், இவ்வொப்பந்தத்தின் ஊடாக தொழிற்துறையாளர்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வொப்பந்தம் கொழும்பில் மட்டுமல்லாது, நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும், பட்டயக் கணக்காளர்களுக்கும் நன்மையாக அமையும்.

இதன்போது, அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திருமதி புஷ்பா, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் ரட்ணமழல உள்ளிட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் உடனிருந்தனர்.

## தமிழ், சிங்கள....

வைக்கப்படும் ஆவணங்களை அந்தந்த மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்வதற்கான மொழிபெயர்ப்பாளர்கள் விரைவில் நீதிமன்றங்களில் நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் கூறியதுடன், வடமாகாணத்தில் சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸார் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான குழு ஒன்று வடமாகாணத்திற்கு என கொழும்பில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் குழுவினர் சட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் குறைகள் தொடர்பில் ஆராய்ந்து அந்த குறைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என தெரிவித்துள்ளார். இக்கலந்துரையாடலில், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் மற்றும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் மற்றும் சட்டத்தரணிகள் பலர் கலந்து கொண்டனர். (25)

## அரசியல்...

தற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்டத்தரணி முடியப்பு ரெமீடியஸ் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், கடந்த காலங்களில் 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பியினர் விடுதலை செய்யப்பட்டனர்.1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். 1989 ஆம் ஆண்டு மீண்டும் ஜே.வி.பியினர் விடுதலை செய்யப்பட்டனர். 2002 ஆம் ஆண்டு 800 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன், 2013 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி தலைவி தமிழினி விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவ்வாறானவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையிலும் கூட விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சம்பளம் வாங்கி வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களும் சிறைகளில் வாடுகின்றார்கள். பெரும் புள்ளிகளை விடுதலை செய்யும் இச்சந்தர்ப்பத்தில் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை ஏன் விடுதலை செய்ய முடியாது என அவர் கேள்வி எழுப்பினார்.

அக்கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கொழும்பு உயர் மட்டங்களுடன் கலந்துரையாடிய பின்னர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக சட்டமா அதிபர் உறுதியளித்துள்ளார். (25)

## யாழ்...

சேனாதிராசா, சரவணபவன், சுமந்திரன், வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் தனித்தனியே பேரவை உறுப்பினர்களுக்கான பெயர் பட்டியலைத் தயாரித்து அனுப்பியிருந்தனர். தமது தெரிவுகளையே முன்னுரிமை அடிப்படையில் உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட வேண்டுமென்ற வற்புறுத் தலை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்திருந் தனர்.

ஆனாலும் யாழ். பல்கலைக்கழகத்துக்கான பேரவை உறுப்பினர்களை குலுக்கல் முறையிலேயே் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. அரசியல் தலையீடுகளுக்கோ, தனிப்பட்ட சிபாரிசுகளுக்கோ உறுப்பினர்கள் தெரிவில் முன்னுரிமை வழங்கப்படவில்லையென உயர் கல்வி அமைச்சின் செய்திகள் தெரிவிக்கின்றன. சமூகமட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு,

தேவராஜன் றங்கன், பொன்னையா தியாகராஜா, மார்க்கண்டு இராமதாஸன், முருகுப்பிள்ளை ஸ்ரீபதி, இளையதம்பி அன்னலிங்கம், தர்மலிங்கம் இராஜரத்தினம், காசிப்பிள்ளை தெய்வேந்திரன், சுசீலாதேவி சாரங்கபாணி, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம், ஷெரின் சேவியர், வண.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், வேதவல்வி செல்வரெத்தினம், கோடீஸ்வரன் ருஷாங்கன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஐ.நா. அறிக்கை..

அதிர்ச்சியடைந்துள்ளதாக ஐ.நா.மனித உரிமை ஆணையர் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணையம் கோரியது போல ஒரு சர்வதேச விசாரணை நடைபெறுவதை சிக்கலாக்கும் நோக்கிலேயே ஒரு அச்சமூட்டக் கூடிய சூழல் இலங்கையில் உருவாக்கப்படுவதாகவும் ஆணையரின் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால் இலங்கை அரசு சர்வதேச விசாரணை என்பதை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும், இது தொடர்பாக எவ்வித ஒத்துழைப்பையும் தாம் தரப்போவதில்லை என்றும் கூறியுள்ளது.

ஜெனிவாவில் இருக்கும் ஐ.நா. அமைப்புகளுக்கான இலங்கைத் தூதர் ரவிநாத் ஆரியசிங்க இது குறித்து பேசுகையில் இலங்கை அரசு, அவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் 25, 1ஐயும்,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் விசாரணை நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதையும் முழுமையாக நிராகரிக்கிறது. இது தொடர்பான விசாரணைகளில் ஒத்துழைக்கப் போவதில்லை என்பதையும் இலங்கை தெளிவுபடுத்திவிட்டது. இந்த நிலைப்பாட்டை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறுபவர்களுக்கு நான் மரியாதையுடன் சொல்லிக் கொள்வது என்னவென்றால் குறையுள்ள ஒரு அணுகுமுறையை சரி என்று காட்டவும், ஒரு தவறான முன் உதாரணத்தை உருவாக்கவும் இலங்கை அரசு விரும்பவில்லை என்றார்.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சுயாதீன விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை மனித உரிமை அமைப்புக்களால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதிலும் கூட்டத்தில் பேசிய நாடுகளின் பிரதிநிதிகள் பலர் இலங்கை அரசின் நிலைப்பாட்டையே ஆதரித்தனர்.

பிரான்ஸ், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் பிரதிநிதிகள் மட்டுமே மனித உரிமைகள் நிலை குறித்து கவலை தெரிவித்தனர்.அதே நேரம் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் காட்டும் சிறப்பு கவனம், எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக இலங்கை குற்றம்சாட்டியது.

ரவிநாத் ஆரியசிங்க பேசுகையில், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் விசாரணை அரசியல் ரீதியானது, இந்த நடவடிக்கை ஒரு நாட்டின் இறைமையையும், சுதந்திரத்தையும் பாதிக்கிறது. ஒரு நாட்டின் உள்நாட்டு சட்டங்கள் மற்றும் வாய்ப்புக்கள் வழியாகவே பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற சர்வதேச சட்டத்தின் விதிமுறைகளையும் இது மீறுவதாக உள்ளது. இலங்கைக்கு உதவுவதுபோல ஐ.நா மனித உரிமை அமைப்பு காட்டிக் கொண்டாலும், இதனுடைய நடவடிக்கைகள் இலங்கையில் மீளிணக்கப்பாடு உருவாவதை தடுக்கும் ஒரு சக்தியாக இருக்கிறது என்றார்.

அதேவேளை, இந்தியப் பிரதிநிதி பேசுகையில், குறித்த நாடு ஒத்துழைக்க மறுத்துள்ள நிலையில் இந்த விசாரணையை எப்படி மேலெடுத்துச் செல்வது என்பது குறித்து மனித உரிமை ஆணையர் ஏதும் சொல்லவில்லை என்பதை நாங்கள் கரிசனையுடன் குறித்துக் கொள்கிறோம். யார் இந்த விசாரணைக் குழுவில் இருப்பார்கள், இது எப்படி வேலை செய்யும், இதற்கான நிதி ஆதாரங்கள் எப்படி வரப்போகிறது என்பது போன்ற தகவல்களும் மனித உரிமை கவுன்சில் உறுப்பினர்களுடன் பகிரப்படவில்லை. இந்த அறிக்கையின் நம்பகத் தன்மையை உறுதிசெய்ய இதுபோன்ற தகவல்களை கொடுக்குமாறு நாங்கள் கேட்கிறோம். இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துவது ஒரு அரசியல் தீர்வை நோக்கிச் செல்ல வழிவகுக்கும். ஒரு கால எல்லைக்குள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினரும் 13 ஆவது அரசியல் திருத்தத்தின் அடிப்படையில் ஒரு தீர்வை உருவாக்க பாடுபட வேண்டும் என்றார்.

## முதலீட்டை...

கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 29ஆம் திகதி யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெறவுள்ள இந்த முதலீட்டாளர் கருத்தரங்கில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா சிறப்பு அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

வடமாகாணத்தை சார்ந்த உள்ளூர் முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களைச்சார்ந்த உத்தியோகத்தர்கள்,அரச அதிகாரிகள் என பலரும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளதுடன் உள்ளூர் ஊடகவியலாளர்களும் இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.


## கைவிடப்பட்டது..

வாங்குவதாக அறிவித்தார். இதை ஆமோதித்து உரை நிகழ்த்துகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைக்கு இந்த வடிவத்தில் இச்சட்டத்தை கொண்டுவராது இருப்பது நல்லது. மேலதிக நடவடிக்கை எடுக்காமல் விடுவது நல்லது.

இதை ஒரு காரணமாக வைத்து நாம் அடையப் போவது எதுவும் இல்லை. நாம் வேறு சட்டங்களை நாம் கொண்டு வரவேண்டியுள்ளது. நாம் தோற்றுப்போகவில்லை நிதி நியதிச் சட்டம் மற்றும் முத்திரை வரி கைமாற்றல் நிதிச் சட்டம் ஆகியன ஏற்றுக்கொள்ளப்பட்டமை எமக்கு கிடைத்த வெற்றி எனவும் தெரிவித்தார். (இ)

# நாடாளுமன்றத்தில் நவராத்திரி விழா



இந்துக்களின் மிக முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான நவராத்திரி விழா 2014 நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுக் காலை சிறப்புற நடைப்பெற்றது.

ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற 2014 நவராத்திரி விழாவில் முன்னதாக பூசைவழிபாடுகள் இடம்பெற்று நிறைவடைந்த பின்னர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களின் நடன நிகழ்வும் மற்றும் யாழ்ப்பாணப்பல்கலைகழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, கண்டி சத்தியசாயி கலாலாயம் மாணவர்களினது நடன நிகழ்வுகளும் சிறப்புற இடம்பெற்றன.

நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2014 நவராத்திரி விழாவில் நாடாளுமன்ற பிரதிசபாநாயகர் சந்திமவீரக்கொடி, அமைச்சர்களான தினேஸ் குணவர்த்தன, வாசுதேவநாணயக்கார, திஸ்ஸவிதாரன, நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயக மூர்த்தி, அஸ்வர், ர.விகருணாநாயக்க, விஜயகலா மகேஸ்வரன்,மற்றும் நாடாளுமன்ற பிரதிசெயலாளார் நாயகம் உள்ளிட்ட நாடாளுமன்ற அலுவலர்கள் இந்து கலாசார திணைக்கள அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மருத்துவ மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## சமரசமுயற்சி தோல்வி

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழு மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளருக் கிடையே நேற்று பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடல் இணக்கபாடின்றி நிறைவுற்றுள்ளது.

தனியார் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு அரச மருத்துமனைகளில் ஆய்வு கூட பயிற்சிகளை வழங்க சுகாதார அமைச்சு தயாராவதாக தெரிவித்து, மருத்துவ பீட மாணவ செயற்பாட்டு குழுவினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி சுகாதார அமைச்சை சென்றடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கலந்துரையாடுவதற்காக ஐந்து மாணவர்களுக்கு சுகாதார அமைச்சிற்குள் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனினும், கலந்துரையாடல் பலனளிக்கவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய மருத்துவ பீட மாணவ செயற் பாட்டு குழு இணைப்பாளர் ரையன் ஜயலத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முகாமைதுவ பீடம் ஒன்றை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி தாம் ஆரம்பித்துள்ள சத்தியா கிரக போராட்டத்தை கைவிட போவதில்லை என பேராதனை பல்கலைகழக பொது மாணவ சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், மாணவர்கள் சத்தியாகிரக போராட்டத்தை கைவிடும் வரை தமது பல்கலைகழகத்தில் முகாமைத்துவ பீடம் ஒன்றை ஸ்தாபிக்க போவதில்லை என பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் அத்துல சேனாரத்ன நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடதக்கது.

# பாம்பு தீண்டிய முதியவர் மருத்துவமனையில்

புடையன் பாம்பு தீண்டிய முதியவர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி வடக்கு பகுதியைச சேர்ந்த மு.துரைராசா (வயது 74) என்ற முதியவரையே பாம்பு தீண்டியுள்ளது. நேற்றுக் காலை அச்சுவேலி செல்வநாயகபுரம் பகுதியில் உள்ள வயலிற்கு சென்ற போது, வயலிலிருந்த குப்பைக்குள் இருந்து பாம்பு தீண்டியுள்ளது.

பாம்பு தீண்டிய முதியவர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# வீதிவிபத்தில் முதியவர் காயம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் நுணாவில் பொது நூலகத்தடியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளாயின.

இதில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த இ.தனபாலசிங்கம் (வயது65) என்பவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ)

# யாழ்.-கொழும்பு ரயில் சேவை நேர அட்டவணை குறித்து ஆராய்வு



கொழும்பில் இருந்து யாழ்பபாணத்திற்கான யாழ்.தேவி புகையிரத விஸ்தரிப்பு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில், யாழ்.கிறீன் கிறஸ் விருந்தினர் விடுதியில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.,க்கலந்துரையாடலில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான புகையிரத சேவையினை ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்ட பின்னர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான யாழ். தேவி புகையிரத சேவையினை விஸ்தரிப்பது தொடர்பிலும், நேர அட்டவணைகள் தொடர்பிலும், புகையிரத சேவைகள் திணைக்களப் பணிப்பாளருடன் விரிவாக கலந்துரையாடினார்., இக்கலந்துரையாடலில், புகையிரத திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (25)

# வயோதிப மாது அடித்துக் கொலை

பலாங்கொட - ஏகொட - வலேகொட பிரதேச வீடொன்றில் நுழைந்த சிறுவன் மேற்கொண்ட தாக்குதலில் குறித்த வீட்டில் இருந்த நூறு வயதைக் கடந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உறவினர் எனக் கருதப்படும் குறித்த சிறுவன் வீட்டுக்குள் நுழைந்து வயோதிபப் பெண்ணிடம் 800 ரூபா பணம் கேட்டு அவரை பொல்லால் தலையில் தாக்கியுள்ளார்.

மூன்று தடவைகள் தலையில் பொல்லால் தாக்கப்பட்ட 103 வயது பாட்டி பலாங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

8ஆம் தரத்தில் கல்வி கற்கும் 13 வயது சிறுவன் ஒருவனே இவ்வாறு பாட்டியை பணம் கேட்டு தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது.

இந்த துரதிஸ்டவசமான சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

# மடிக்கணனி திருட்டு; வவுனியாவில் கைது

வவுனியா - பண்டாரிக்குளம் விபுலானந்தா மஹா வித்தியாலய அதிபரின் வீட்டில் இருந்த மடிக்கணனி மற்றும் நவீன கையடக்கத் தொலைபேசியை கொள்ளையிட்ட யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து அதிபரினால் வழங்கப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து, தொலைபேசி நிலையத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் குறித்த தொலைபேசி இருக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகநபர் கைதாகியுள்ளார். இவர் அதிபரின் வீட்டுக்கு அருகில் வசிப்பவர் எனவும், அவர் வீட்டில் இல்லாத நேரம் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

# "சோ.ப.75" வெளியீடு



கவிஞர் சோ.பத்மநாதனின் பவள விழா "சோ.ப.75" நூல் வெளியீட்டு விழா நாளை இளங்கலைஞர் வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறுகின்றது.

காலை 9 மணிக்கு பேராசிரியர் சி.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் வரவேற்புரையையும் கலாநிதி ஆறுதிருமுருகன் மற்றும் அருட்திரு ஜே.ஈ.ஜெயசீலன் வாழ்த்துரையை வழங்குகின்றனர்.திருமதி கோகிலா மகேந்திரன் வெளியீட்டுரையை நிகழ்த்துவதுடன் முதற்பிரதியை எஸ்.பி.சாமி பெறுகின்றார், ஆய்வுரைகள் கவிதை ஆற்றுகை சிறப்புரை, நடன அறிக்கை, ஏற்புரை, நன்றியுரை, யாழ்ப்பாணகீதம், மற்றும் விருந்துபசாரம் என்பன இடம்பெறவுள்ளது.

# தேசிய மட்ட கரப்பந்தாட்டம்

## இளவாலை ஹென்றியரசர் இரண்டாமிடம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டத் தொடரின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி நேற்று கொழும்பு பம்பலப்பிட்டி குணசிங்க விளையாட்டு, அரங்கில் நடைபெற்றது. இதில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் வெண்புலவா ஜோசப் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 3-4 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியதுடன் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதேவேளை, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி மைதான ஒழுங்கு சீரின்மை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. இதன் காரணமாக வடமாகாணம் சார்பாக போட்டிகளில் பங்குபெறச் சென்ற மானிப்பாய் இந்து, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணிகள் பெரும் பாதிப்படைந்துள்ளதுடன் விசனம் அடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (93)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.